Registered as a news paper.

பக்கங்கள்: எட்டு

விலை ரூபா 10.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

யாழ்.நகரில் தனித்துவமான
கலைநயம் மிக்க துல்லியமான
அச்சுவேலைகளுக்கு
SP சிறந்த இடம்
சுரபி பதிப்பகம்
267, நாவலர் வீதி யாழ்ப்பாணம்.

மலர்:04 திருவள்ளுவர் ஆண்டு: 2037 சித்திரை 25 ஹிஜ்ரி 1427 ற.ஆகிர் 09 (08.05.2006) திங்கட்கிழமை இதழ் 220

# மந்துவிலில் காணாமற்போன 8 இளைஞர்களும் படுகொலை?

தென்மராட்சி

தென்மராட்சி - மந்துவில் கீழக்கை அம்மன் ஆலயத்தில் தொண்டுப்பணி செய்துவிட்டு இரவு அங்கு தங்கியிருந்த போது காணாமற்போன 8 இளைஞர்களும் படுகொலை செய்யப்பட்டிருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

இவர்களின் சடலங்கள் கப்பூது பகுதிக்கு அண்மையில் உள்ள கொம்பிமுனை காட்டுப் பகுதியில் போடப்பட்டிருப்பதாக உறுதிப்படுத்தப்படாத தகவல்கள் வெளியாகியுள்ளன.

எனினும், இந்தச் சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டது குறித்து பொலிஸார் உறுதிப்படுத்தவில்லை.

தென்மராட்சி - மந்துவில் கிழக்கில் உள்ள கீழக்கை அம்மன் ஆலயத்தில் கும்பாபிஷேக விழாவுக்கான ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருந்த 8 இளைஞர்கள் நேற்றுமுன்தினம் இரவு மர்மமானமுறையில் காணாமற்போயிருந்தனர்.

ஆலயப் பகுதியில் காணப்பட்ட இரத்தக்கறை மற்றும் தடயப் பொருட்களைக் கொண்டு இவர்கள் படுகொலை செய்யப்பட்டிருக்கலாம் என்று பொதுமக்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

காணாமற்போன இளைஞர்களின் சடலங்கள் கொம்பிமுனை காட்டுப் பகுதியில் வீசப்பட்டிருப்பதாக நேற்றிரவு உறுதிப்படுத்தப்படாத தகவல்கள் தெரிவித்தன.

இந்தப் பகுதியில் நேற்று மாலை பெருமளவு படையினர் குவிக்கப்பட்டு அந்தப் பகுதியூடான போக்குவரத்துகள் யாவும் தடைசெய்யப்பட்டிருந்தது.

குடாநாட்டை அதிர்ச்சியில் ஆழ்த்தியிருக்கும் இந்தச் சம்பவம்

(08 ஆம் பக்கம் பார்க்க)

## திடீர் ஊரடங்கு ஏன்?

### பொதுமக்கள் குழப்பம்

யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணக் குடாநாட்டில் நேற்று நள்ளிரவு முதல் இன்று மாலைவரை திடீரென படையினர் ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தியதற்கான காரணம் குறித்து உத்தியோகபூர்வமாக எந்தத் தகவலும் வெளியிடப்படவில்லை.

திடீர் ஊரடங்குச் சட்டத்தையடுத்து குடாநாடு முழுவதும் இன்று காலை படையினர் தேடுதல் நடவடிக்கையை ஒரே நேரத்தில் [illegible]

களது கனரக ஆயுத தளபாடங்களையும் முன்னரங்க நிலைகளை நோக்கி நகர்த்துவதற்கான ஒரு தந்திரோபாயமாகவே இந்த ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டதாக மற்றொரு தகவல் தெரிவித்தது.

ஆயினும், இதையும் உறுதிப்படுத்தமுடியவில்லை. எனினும், தெல்லிப்பளை ஊடாக பெருமளவு கனரக இராணுவ வாகனங்களின்நடமாட்டம் காணப்பட்டதாக தகவல்கள் [illegible]

## யாழ்.குடாநாடு முழுவதும் ஊரடங்கால் ஸ்தம்பிதம்!

யாழ்ப்பாணம்

யாழ்.குடாநாட்டில் நேற்று நள்ளிரவுமுதல் இன்று பிற்பகல் 4 மணிவரை ஊரங்குச்சட்டம் பிறப்பிக்கப்பட்டதால் பொதுமக்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டனர்.

நேற்றிரவு திடீரென படையினர் பலாலி வானொலி ஒலிபரப்பு ஊடாக இந்த ஊரடங்கு உத்தரவு குறித்த செய்தியை அறிவித்தனர்.

படையினரின் இந்த திடீர் அறிவிப்பால் அத்தியாவசிய பணிகளுக்காக வெளியில் செல்லவிருந்தோரும் மற்றும் பொதுமக்களும் பல்

இந்தத் திடீர் ஊடரங்குச் சட்டம் காரணமாக யாழ்.குடாநாடு முழுவதும் இயல்புநிலை பாதிக்கப்பட்டிருந்தது.

இன்று மாலை 4 மணியளவில் ஊடரங்குச் சட்டம் நீக்கப்படும் என பலாலி படைத் தலை

(08 ஆம் பக்கம் பார்க்க)

## ஏ 9 போக்குவரத்து; படையினர் தடை!

# திடீர் ஊரடங்கு ஏன்?

## பொதுமக்கள் குழப்பம்

யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணக் குடாநாட்டில் நேற்று நள்ளிரவு முதல் இன்று மாலைவரை திடீரென படையினர் ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தியதற்கான காரணம் குறித்து உத்தியோகபூர்வமாக எந்தத் தகவலும் வெளியிடப்படவில்லை.

திடீர் ஊரடங்குச் சட்டத்தையடுத்து குடாநாடு முழுவதும் இன்று காலை படையினர் தேடுதல் நடவடிக்கையை ஒரே நேரத்தில் மேற்கொள்ளக்கூடும் என பரவலாக எதிர்பார்க்கப்பட்டிருந்தது.

ஆனால், இந்தச் செய்தி இன்று பிற்பகல் அச்சிடப்படும்வரை குடாநாட்டின் எந்தப் பகுதியிலும் குறிப்பிடத்தக்க வகையில் தேடுதல்கள் இடம்பெற்றதாக தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லை.

அதேவேளை, படையினரையும் அவர்களது கனரக ஆயுத தளபாடங்களையும் முன்னரங்க நிலைகளை நோக்கி நகர்த்துவதற்கான ஒரு தந்திரோபாயமாகவே இந்த ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டதாக மற்றொரு தகவல் தெரிவித்தது.

ஆயினும், இதையும் உறுதிப்படுத்தமுடியவில்லை. எனினும், தெல்லிப்பளை ஊடாக பெருமளவு கனரக இராணுவ வாகனங்களின்நடமாட்டம் காணப்பட்டதாக தகவல்கள் தெரிவித்தன.

அதேவேளை, மந்துவில் பகுதியில் காணாமற்போன இளைஞர்களின் சடலங்கள் கொம்பிமுனைக் காட்டுப்பகுதியில் கிடப்பதாகத் தகவல் வெளியான நிலையில் - இந்தச் சடலங்களை மூடிமறைப்பதற்காக ஊடரங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டதா என பலரும் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

# யாழ்.குடாநாடு முழுவதும் ஊரடங்கால் ஸ்தம்பிதம்!

யாழ்ப்பாணம்

யாழ்.குடாநாட்டில் நேற்று நள்ளிரவுமுதல் இன்று பிற்பகல் 4 மணிவரை ஊரங்குச்சட்டம் பிறப்பிக்கப்பட்டதால் பொதுமக்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டனர்.

நேற்றிரவு திடீரென படையினர் பலாலி வானொலி ஒலிபரப்பு ஊடாக இந்த ஊரடங்கு உத்தரவு குறித்த செய்தியை அறிவித்தனர்.

படையினரின் இந்த திடீர் அறிவிப்பால் அத்தியாவசிய பணிகளுக்காக வெளியில் செல்லவிருந்தோரும் மற்றும் பொதுமக்களும் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொள்ள நேரிட்டது.

இன்று காலை சில இடங்களில் படையினர் ஊட்ரங்கு தொடர்பாக ஒலிபெருக்கிமூலம் அறிவித்தனர். ஊடரங்கு குறித்த தகவலை அறியாத பலர் இன்றுகாலை வீதிகளில் நடமாடிய போதும் பின்னர் படையினரால் திருப்பி அனுப்பப்பட்டதுடன் பலர் வீதிகளில் பிடித்துவைக்கப்பட்டிருந்தனர்.

இந்தத் திடீர் ஊடரங்குச் சட்டம் காரணமாக யாழ்.குடாநாடு முழுவதும் இயல்புநிலை பாதிக்கப்பட்டிருந்தது.

இன்று மாலை 4 மணியளவில் ஊடரங்குச் சட்டம் நீக்கப்படும் என பலாலி படைத் தலை

(08 ஆம் பக்கம் பார்க்க)

# ஏ 9 போக்குவரத்து; படையினர் தடை!

யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணக் குடாநாடு மற்றும் வன்னிப் பகுதிக்கான ஏ 9 வீதியூடான போக்குவரத்துக்களைப் படையினர் இன்றுகாலைமுதல் தடை செய்திருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன்.

யாழ்.குடாநாடு முழுவதும் நேற்று நள்ளிரவு

(08 ஆம் பக்கம் பார்க்க)

# திருநெல்வேலி சந்தியில் இளைஞர் சுட்டுக்கொலை!

யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணம் - திருநெல்வேலிப் பகுதியில் இளைஞர் ஒருவர் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

திருநெல்வேலி சந்தியிலுள்ள ஹோட்டல் ஒன்றின் முன்பாக நேற்று மாலை 5.30 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சூட்டுச் சம்பவத்தில் நீர்வேலி கரந்தனைச் சேர்ந்த சாந்தன் என்று அழைக்கப்படும் தாமோதரம்பிள்ளை தாரக

(08 ஆம் பக்கம் பார்க்க)

# படையினரின் கட்டுப்பாட்டிலா மந்துவில் பிரதேசம் உள்ளது?

## இராணுவப் பேச்சாளருக்கு தெரியாதாம்

கொழும்பு



எட்டு இளைஞர்களும் காணாமற் போனதாகக் கூறப்படும் சம்பவம் இராணுவ கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் நடந்ததா இல்லையா? என்பது குறித்து தமக்கு எதுவும் தெரியாது என இராணுவ பேச்சாளர் பிரசாத் சமரசிங்க தெரிவித்தார்.

தென்மராட்சி - மந்துவில் பகுதி யில் எட்டு இளைஞர்கள் காணாமல்போன சம்பவம் தொடர்பாக பி.பி.சி க்கு அளித்த பேட்டியில் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது -

தென்மராட்சி மந்துவில் பகுதியில் எட்டு இளைஞர்கள் காணாமல்போன சம்பவம் தொடர்பாக அந்தப் பகுதியில் உள்ள இராணுவத்தினருடன் தொடர்புகொண்டு விசாரித்துள்ளேன்.

இவ்வாறான சம்பவம் நடைபெற்றதை அவர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர். ஆனால், அது தொடர்பாக அவர்களுக்கு எந்தத் தொடர்பும் கிடையாது. இப்படி கோயிலில் இராணுவத்தினர் எதனையும் நிச்சயமாகச் செய்யமாட்டார்கள். அத்துடன் இராணுவத்தினர் சிவிலியன்களைக் கொல்வதும் இல்லை.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் குறுக்கு விசாரணை செய்து வருகின்றனர். ஆகவே இது தொடர்பாக இப்போதைக்கு எதனையும் கூறமுடியாது.

(08 ஆம் பக்கம் பார்க்க)

# மட்டக்களப்பில் கிரனேட் வீச்சு 7 பொலிஸார் படுகாயம்

மட்டக்களப்பு

மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்தின்மீது நேற்றிரவு நடத்தப்பட்ட கிரனேட் தாக்குதலில் ஏழு பொலிஸார் படுகாயமடைந்தனர்.

நேற்றிரவு 7.25 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. இரு மோட்டார் சைக்கிள்களில் வந்தவர்கள் இந்தத் தாக்குதலை மேற்கொண் டனர்.

பொலிஸ் நிலைய வாசலில் கிரனேட் வீழ்ந்து

(08 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகள் நிலைகள் மீது படையினர் தாக்குதல்

மட்டக்களப்பு

மட்டக்களப்பு - வவுணதீவில் விடுதலைப் புலிகள் மீது இராணுவத்தினர் நேற்றுத் தாக்குதல் நடத்தினர்.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள வவுணதீவுப்பகுதிமீது நேற்றுக்காலை 6 மணியளவில் படையினர் ஆட்லறி மற்றும் மோட்டார் ஷெல் தாக்குதல்களை மேற்கொண்ட னர். இது

(08 ஆம் பக்கம் பார்க்க)

# வவுனியாவில் சிப்பாய் காயம்!


வவுனியா

வவுனியா-அக்போபுரவில் இராணுவநிலை ஒன்றின் மீது நேற்றுக்காலை தாக்குதல் நடத்தப்பட்டதாக இராணுவத்தலைமையகம் அறிவித்தது.

நேற்றுக்காலை 10.15 மணியளவில் படையினர்மீது இனந்தெரியாத குழுவொன்று இந்தத் தாக்குதலை மேற்கொண்டது.

(08 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழனுக்கு அடிமையாக இருந்து உயிரை விடுவாராம் கருணாநிதி!



சென்னை —

தமிழனுக்கு அடிமையாக இருந்து உயிரை விட்டால் அதையே எனக்கு சொர்க்கமாக நான் கருதுவேன் என தி.மு.க தலைவர் மு.கருணாநிதி கூறினார்.

தி.மு.க ஆட்சிக்கு வந்தால் பழி வாங்கும் செயலில் ஈடுபடும் என்று சிலர் அஞ்சுகின்றனர். அப்படி ஒரு எண்ணம் எங்களுக்கு இல்லை.

தி.மு.க ஆட்சியில் என்றைக்கும் நியாயம்தான் நடக்கும். சட்டத்தின் ஆட்சிதான் நடக்குமே தவிர எங்கள் இஷ்டத்துக்கான ஆட்சி நடக்காது.

யாரையும் பழிவாங்க வேண்டும் என்ற வெறிபிடித்து அலையமாட்டோம்.

நான் பகைமையைத் தாங்குவேன். துரோகத்தைத்தான் தாங்கிக் கொள்ளமுடியாது. இப்போது யார் யாரோ என் மீது அஸ்திரம் விடுவதாக பேசுகின்றனர். என் நெஞ்சில் ஏற்கனவே பல ஆயிரம் அஸ்திரங்கள் தைத்து காயப்படுத்தியுள்ளன. இன்னொரு அஸ்திரம் தைப்பதற்குக் கூட இடம் இல்லாத அளவுக்கு பழைய அஸ்திரங்களின் காயங்கள் உள்ளன. சீழ் வடிந்தாலும் ஏழைகளின் நல் வாழ்வுக்காகத்தான் இந்த இதயம் துடிக்கும்.

என் உடலில் ஓடும் இரத்தத்தில் அன்றும் இன்றும் என்றும் சுழன்று கொண்டிருப்பது சுயமரியாதை எண்ணம்தான்.

தேர்தலில் வென்று எம்.எல்.ஏ ஆக வேண்டும் என்பதற்காகவோ ஆட்சிப் பொறுப்பை ஏற்க வேண்டும் என்பதற்காகவோ நான் பிறந்ததாகக் கருதிக் கெண்டிருக்கவில்லை.

முதல்வராக இருக்கவேண்டும் என்பதைவிட தமிழர்களே உங்களுக்கு அடிமையாக இருக்கவே விரும்புகிறேன். வேறு யாருக்குமல்ல. தமிழர்களுக்கு அடிமையாக இருக்க விரும்புகிறேன். அந்த அடிமை சேவையில் உங்கள் காலடியில் சுருண்டு வீழ்ந்து செத்தாலும் அதுதான் எனக்கு சொர்க்கம் என்று கருதுவேன் எனத் தெரிவித்தார்.

# அரசியல் செய்யவந்த கருணாநிதி தற்போது வியாபாரம் செய்கிறார்

## நாஞ்சில் சம்பத் கிண்டல்



தாம்பரம்

வியாபாரத்துக்காக இந்தியா வந்த ஆங்கிலேயர் அரசியல் செய்தனர். ஆனால், அரசியல் செய்வதற்காக வந்த கருணாநிதி இப்போது வியாபாரம் செய்கிறார். விலை மதிக்கமுடியாத சொத்துக்களை வாங்குவதற்கும், வாங்கிய சொத்துக்களை காப்பாற்றுவதற்குமே இப்போது ஆட்சிக்கு வர அவர் துடித்துக் கொண்டிருக்கிறார் என்று ம.தி.மு.கவின் கொள்கை விளக்க செயலர் நாஞ்சில் சம்பத் கூறினார்.

ஒரு வாரத்துக்கு முன்பு நான் குறிப்பிட்டதைப் போலவே இப்போது நூறு கோடி ரூபா கொடுத்து ஜூனியர் விகடன் பத்திரிகையை கருணாநிதி குடும்பம் வாங்கியுள்ளது. தேர்தலில் தி.மு.க வெற்றி பெறும் என்று அதில் எழுதியுள்ளனர். வியாபாரம் செய்வதற்காக இந்தியா வந்த ஆங்கிலேயர்கள் அரசியல் செய்தனர்.

ஆனால், அரசியல் செய்வதற்காக வந்த கருணாநிதி இப்போது வியாபாரம் செய்கிறார். கடந்த 1988 ஆம் ஆண்டு போரூர் ராமச்சந்திரா மருத்துவமனையை கருணாநிதி விலைக்கு கேட்டார். இதற்கு உடையார் மறுத்து விட்டார். அடுத்த தேர்தலில் கருணாநிதி ஆட்சிக்கு வந்தவுடன் ராமச்சந்திரா மருத்துவமனையை அரசு உடமையாக்கும் ஒரு திட்டத்தைக் கொண்டு வந்தார்.

பின்னர் மருத்துவமனையின் எதிரேயுள்ள ஐம்பது ஏக்கர் நிலத்தை இல வசமாக வாங்கிக்கொண்டு அரசு உடமையாக்கும் திட்டத்தை கைவிட்டவர் தான் கருணாநிதி.

விலை மதிக்க முடியாத சொத்துக்களை வாங்கி ஆதாயம் தேடுவதற்கும், வாங்கிய சொத்துக்களை காப்பாற்றுவதற்கும்தான் கருணாநிதி இப்போது ஆட்சிக்கு வரத் துடித்து கொண்டிருக்கிறார். ஆங்கிலேயர் ஆட்சியில் எதிர்நீச்சல் போட்டு முன்னேறிய டாடாவை மிரட்டிய தயாநிதி மாறனை காப்பாற்ற கருணாநிதி பாடுபட்டு வருகிறார்.

முதல்வர் ஜெயலலிதாவின்ஐந்து ஆண்டு கால ஆட்சியில் ரவுடித்தனம், இல்லாமல் தமிழகம் அமைதியாக இருந்தது. மாநிலத்தில் உள்ள 56 லட்சம் திருமணம் ஆகாத பெண்களுக்காகவே ஜாதி, மதம் பார்க்காமல் தாலிக்கு நான்கு கிராம் தங்கம் கொடுப்பதாக ஜெயலலிதா அறிவித்துள்ளார் என அவர் தெரிவித்தார்.

# அ.தி.மு.க தனிப் பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்கும் என்கிறார் ஜெயலலிதா



சென்னை —

தமிழக சட்டசபைத் தேர்தலில் மக்களின் பேராதரவுடன் அ.தி.மு.க. கூட்டணி மகத்தான வெற்றியைப் பெறும். அ.தி.மு.க தனிப் பெரும்பான்மை பெற்று தனித்து அரசு அமைக்கும் என்று முதலமைச்சர் ஜெயலலிதா கூறினார்.

அவர் அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளதாவது -

கேள்வி :- இந்தத் தேர்தலில் வெற்றி பெறவேண்டும் என்பதற்காக அ.தி.மு.க ஆதரவாளர்களைக் கடத்த வேண்டும் என்ற அர்த்தத்தில் தி.மு.க தலைவர் கருணாநிதி பேசியுள்ளாரே?

பதில் :- இந்தத் தேர்தலில் எப்படியாவது வெற்றி பெற்றுவிடவேண்டும் என்பதற்காக கருணாநிதி வன்முறையைத் தூண்டிவிடத் தயாராகிவிட்டார் என்பதுதான் அவருடைய இந்தப் பேச்சில் இருந்து தெரிகிறது. தேர்தலில் தோல்வி பயம் எற்பட்டதன் காரணமாக விரக்தியின் விளிம்புக்கே கருணாநிதி சென்றுவிட்டிருக்கிறார்.

அவர் வன்முறையைத் தூண்டி, அ.தி.மு.க.வுக்கு வாக்களிக்கும் வாக்காளப் பெருமக்களை அச்சுறுத்த, மிரட்ட எத்தனித்துள்ளார். இதற்கெல்லாம் பயந்துவிட்டாமல், இந்த அராஜக வன்முறைகளை எதிர்த்து அ.தி.மு.க.வுக்கு வாக்களிப்பவர்கள் எந்த வித அச்சத்திற்கும் இடமின்றி வாக்குச்சாவடிக்கு தைரியமாகச் சென்று வாக்களிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கருணாநிதியின் வன்முறையைத் தூண்டும் பேச்சுகளைக் கண்டு யாரும் பயந்துவிடக்கூடாது. தைரியமாகச் சென்று அவர்கள் வாக்குரிமையைச் செலுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கேள்வி :- தேர்தல் முடிவு எப்படி இருக்கும் என்று எதிர்பார்க்கிறீர்கள்?

பதில் :- மக்களின் பேராதரவோடு அ.தி.மு.க தலைமையிலான ஜனநாயக மக்கள் கூட்டணி 234 இடங்களில் அறுதிப்பெரும்பான்மை பெற்று மகத்தான வெற்றியைப் பெறும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

கேள்வி :- தனிப்பெரும்பான்மை கிடைக்காவிட்டால் வைகோவுடன் சேர்ந்து கூட்டணி ஆட்சி அமைப்பீர்களா?

பதில் :- கூட்டணி ஆட்சி அமைப்பது குறித்து எண்ணவேண்டிய எந்தவிதமான தேவையும் இல்லை. மக்களின் ஆதரவோடு அ.தி.மு.க. தேர்தலில் தனிப்பெரும்பான்மை பெற்று தனித்தே அரசு அமைக்கும்.

கேள்வி :- இந்தத் தேர்தலில் தனிப்பட்ட முறையிலான தாக்குதல் அதிகமாக இருப்பதாகக் கருதுகிறீர்களா?

பதில் :- நிச்சயமாக, இதுபோதும். தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்படும் வரை நாம் காத்திருப்போம்.

கேள்வி :- உங்களது தேர்தல் வாக்குறுதிகள், தி.மு.க. தேர்தல் வாக்குறுதிகளைப் பின்பற்றி அறிவிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறதே?

பதில் :- அப்படி ஒன்றும் இல்லை. என்னுடைய வாக்குறுதிகளை அனைவரும் பார்த்துக்கொள்ளலாம். என்னுடைய அனைத்து எண்ணங்களும் என்னிடத்தில் இருந்து உருவானவைகளாகும்.

கேள்வி :- இப்போது வந்துள்ள பல கருத்துக் கணிப்புகள் தி.மு.க. கூட்டணிக்கு அதிக இடங்கள் கிடைக்கும் என்ற வகையில் வெளியிடப்பட்டுள்ளதே?

பதில் :- முதலில் வந்த கருத்துக் கணிப்பு சரியானது. அதில் அ.தி.மு.க.வுக்கு மற்றும் கூட்டணி கட்சிகளுக்கும் பெரும்பான்மையான இடங்கள் கிடைக்கும் என்று சொல்லப்பட்டிருந்தது. அதுதான் உண்மை.

அதன் பிறகு தி.மு.க.வினர் செயற்கைக் கருத்துக்கணிப்பை நடத்த வைத்து அவர்களுக்கு சாதகமாக சில அறிக்கைகளைக் கொடுக்க வைத்திருக்கிறார்கள். அதை எல்லாம் பார்த்து யாரும் கவலைப்படவேண்டியதில்லை. நாங்கள் கவலைப்படவும் இல்லை என ஜெயலலிதா கூறினார்.




# மத்திய அரசுடன் இணக்கமாக ஜெயலலிதாவால் இருக்கமுடியாது

## என்கிறார் சிதம்பரம்

சென்னை —

மத்திய அரசுடன் இணக்கமாக செயல்படும் மாநில அரசுக்கும் இணக்கமான நல்லுறவு அவசியம். அத்தகைய அரசை ஜெயலலிதா இதுவரை நடத்தவில்லை. இனியும் அவரால் அத்தகைய அரசை தர முடியாது என்று நிதியமைச்சர் ப.சிதம்பரம் கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் -

ஆசிய வளர்ச்சி வங்கியின் 39 ஆவது ஆண்டுக்கூட்டம் ஹைதராபாத்தில் நடைபெற்றது. இதுபோன்ற உலகநாடுகள் தழுவிய நிகழ்ச்சியை சென்னையில் நடத்த முடியுமா என்ற கேள்வி எழுகிறது. மூவாயிரம் பிரதிநிதிகள் அமரக்கூடிய அளவில் சென்னையில் உலகத்தரத்துக்கு ஈடாக ஒரு மாநாட்டு வளாகம் இல்லை. கடந்த ஐந்தாண்டு காலத்தில் சென்னையில் ஒரு புதிய விரிந்த சாலை உருவாக்கப்படவில்லை. குடிநீர் என்பது இன்னும் பிரச்சினையாகவே இருக்கிறது. சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துள்ளது.

மத்திய அரசுடன் அறவே ஒத்துழைக்காத ஒரே மாநில அரசு தமிழகத்தில் உள்ள அ.தி.மு.க அரசு, எல்லா மாநில அரசுகளையும் மத்திய அரசு மதிக்கிறது. எல்லோருடனும் நல்லுறவு வைத்துக்கொள்ள வேண்டும் என்று விரும்புகிறது.

முக்கியமான பிரச்சனைகள் மற்றும் திட்டங்கள் குறித்து நிதியமைச்சர் என்ற முறையில் நான் அவ்வப்போது மாநில முதல்வர்களுக்கு கடிதம் எழுதுவேன். ஆனால், நான் அவ்வாறு எழுதிய கடிதங்களுக்கு ஒரு பதில் கூட எழுதா முதல்வர் ஜெயலலிதா என்பதை வருத்தத்துடன் குறிப்பிடுகிறேன்.

இந்த அணுகுமுறை நல்லதா என தமிழக மக்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். சண்டைக்கோழியாக இருப்பது சுவையாக இருக்கலாம். சர்ச்சைகள் கிளுகிளுப்பூட்டலாம். ஆனால் இந்த அணுகுமுறை நல்லதல்ல.

தமிழக மக்கள் எதிர்காலத்தையும், முன்னேற்றத்தையும் விரும்புவோர், குறிப்பாக நம்முடைய இளைஞர்கள், மாணவர்கள் மற்றும் குழந்தைகளின் நலனை விரும்புவோர் ஜனநாயக முற்போக்கு கூட்டணி வேட்பாளர்களுக்கு அனைத்து தொகுதிகளிலும் வாக்களிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தி.மு.க எம்.பிக்கள் விலகினால் ம.தி.மு.கவினரும் விலகுவர்!

## என்கிறார் வைகோ



சிவகாசி —

தி.மு.க எம்.பிக்கள் ராஜினாமா செய்தால் ம.தி.மு.க எம்.பிக்களும் ராஜினாமா செய்யத் தயார் என ம.தி.மு.க பொதுச்செயலாளர் வைகோ கூறினார்.

ம.தி.மு.க எம்பிக்களையும் சேர்த்து கணக்கு காட்டித்தான் 13 மத்திய அமைச்சர்களை கருணாநிதி பெற்றார்.

பிரதமர் மன்மோகன் சிங், சோனியா காந்தி ஆகியோர் இது பற்றி என்னிடம் பேசினார்கள். அப்போது அவர்கள் தி.மு.கவுக்குள் ம.தி.மு.க கூட்டு என்றார்கள். நான் இதை பிரச்சினையாக்கவில்லை.

இப்போது தி.மு.க எம்.பிக்களை ராஜினாமா செய்யச் சொல்வாரா கருணாநிதி? அவர்கள் ராஜினாமா செய்தால் ம.தி.மு.க எம்.பிக்களும் ராஜினாமா செய்யத் தயார்.

டாடாவை மிரட்டியதாக குற்றம் சாட்டியது நான். என் மீது வழக்குப் போடாமல் தினமணி, இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளிதழ்கள் மீது வழக்குப் போடக் காரணம் என்ன? இந்தக் குற்றச்சாட்டு குறித்து பிரதமர் சோனியா ஆகியோர் மறுக்கவில்லையே? இது குறித்து சி.பி.ஐ விசாரிக்க உத்தரவிட வேண்டும்.

பத்திரிகை, தொலைக்காட்சி என அனைத்து தொழில்களும் தங்களது கையில் இருக்கவேண்டும் என்று எண்ணுபவர்களின் கையில் தமிழகம் கிடைத்தால் என்ன ஆகும்?

காவிரிப் பிரச்சினை ஏன் தி.மு.க தேர்தல் அறிக்கையில் இடம்பெறவில்லை.

என்னைக் கொலை செய்ய மும்பையில் கூலிப்படை தயாராகி விட்டதாக தகவல் கிடைத்துள்ளது. நான் மரணத்துக்கு அஞ்சவில்லை.

தமிழகத்தில் அமைதி நிலவவேண்டும். இப்போது நடக்கும் போராட்டம் ஒரு குடும்பத்தின் ஆதிக்கமா? 6 கோடி தமிழ் மக்களின் வாழ்க்கையா என்பதை நீங்கள்தான் முடிவு செய்ய வேண்டும்.

மத்தியில் ஜனநாயக முற்போக்கு கூட்டணியில் ம.தி.மு.க தொடர்ந்தால் அந்தக் கூட்டணியிலிருந்து தி.மு.க வெளியேறும் என தி.மு.க தலைவர் கருணாநிதி தனியார் தொலைக்காட்சிக்கு அளித்துள்ள பேட்டியில் கூறியது குறித்து ம.தி.மு.கவின் கருத்தை கேட்கிறீர்கள்.

அவர் ஆரம்பத்தில் காங்கிரசை மிரட்டித்தான் பல அமைச்சர் பதவிகளைப் பெற்றார். அவர்கள் பதவியை விட்டு விட்டு செல்லமாட்டார்கள். காங்கிரசை மிரட்டவே இது போன்று கூறுகிறார்கள் என்றார்.


மனோகரா யாழ்ப்பாணம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின அதிரடி வெளியீடு

அஜித்குமார், சதா மற்றும் பலர் நடித்த

மூன்றாவது வெற்றி வாரம்

திருப்பதி



காட்சி நேரம் 10.30,2.30,6.30,9.30

நிறைஞ்சனாஸ் சங்கானை

சத்தியராஜ் ரோஜா நடித்த

எங்கிருந்தோ வந்தான்

காட்சி நேரம் : 10.30, 2.15, 5.30

ராஜா யாழ்ப்பாணம்

புதுவருட வெளியீடு

பரத், மல்லிகா கபூர் மற்றும் பலர் நடித்த

அழகாய் இருக்கிறாய் பயமாய் இருக்கிறது



இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரே தின வெளியீடு

நேரம் : 10.30,2.30,6.30,9.30

## இராணுவத் தளபதி மீதான தாக்குதல்

# ஹங்கேரி, அவுஸ்ரேலிய உதவிகளை விசாரணை அதிகாரிகள் நாடினர்!

கொழும்பு —

இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சரத் பொன்சேகா மீது நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதல் குறித்த விசாரணைகளுக்கு இலங்கை அரசு வெளிநாட்டு உதவியை நாடியுள்ளது.

கடந்த மாதம் 25 ஆம் திகதி இராணுவத் தலைமையகத்துக்குள் வைத்து - இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சரத் பொன்சேகா மீது பெண் தற்கொலைக் குண்டுதாரி ஒருவர் தாக்குதல் நடத்தியிருந்தார்.

இந்தச் சம்பவத்தில் இராணுவத் தளபதி உட்பட 30 பேர் படுகாயமடைந்ததுடன், 11 படையினர் கொல்லப்பட்டனர்.

தாக்குதலை மேற்கொண்ட பெண் தற்கொலைக் குண்டுதாரி கர்ப்பிணி போலவே இராணுவத் தலைமையக வளாகத்துக்குள் பிரவேசித்ததாக விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

21 வயதான பெண்ணே தாக்குதல் நடத்தியதாகப் பொலிஸாரால் இனங்காணப்பட்டுள்ளது. மேலும் தாக்குதல் நடத்திய பெண்ணின் தலை மற்றும் இடது கால் என்பன மீட்கப்பட்டன.

அத்துடன், குறித்த பெண் பயன்படுத்திய செல்போனின் சிம்காட்டும் மீட்கப்பட்டுள்ளது. ஆனால், இவற்றைக் கொண்டு எந்த முடிவுக்கும் வரமுடியாத நிலையில் விசாரணை அதிகாரிகள் உள்ளனர்.

குறித்த பெண் உண்மையிலேயே கர்ப்பிணிதான் என்று முன்னர் கூறப்பட்ட போதும் - உள்ளூரில் நடத்தப்பட்ட இரத்தப் பரிசோதனைகள் மூலம் அதனை உறுதிசெய்ய முடியாதது போனது.

இங்குள்ள வசதிகளைக் கொண்டு இதற்குமேல் விசாரணைகளை மேற்கொள்ள முடியாததால் குறித்த பெண்ணின் இரத்த மாதிரி பரிசோதனைக்காக அவுஸ்ரேலியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அங்கு உயர்தொழில்நுட்ப முறைகள் மூலம் குறித்த பெண் கர்ப்பிணியா என்பதைக் கண்டறிய முடியும் எனப் பொலிஸ் குற்றப் புலனாய்வுத்துறை அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இதேவேளை - சம்பவ இடத்தில் இருந்து மீட்கப்பட்ட செல்போனின் சிம்காட்டும் மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்காக - அது உற்பத்தி செய்யப்பட்ட ஹங்கேரிக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளது.

இதன் மூலம் தொகுதி இலக்கத்தைக் கண்டுபிடிக்க முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. குறித்த செல்போன் உள்ளூர் தொலைத் தொடர்பு முகவர்களிடம் பதிவு செய்யப்படவில்லை என்று கண்டறியப்பட்டிருக்கிறது.

இதனால் குறித்த செல்போன் உற்பத்தி செய்த ஹங்கேரிய நிறுவனத்திடமிருந்து தகவல்களைப் பெற்றுக்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# கடற்புலிகளை வெல்லும் ஆற்றல் கடற்படைக்குள்ளது

## என்கிறார் கடற்படை அதிகாரி

கொழும்பு —

விடுதலைப் புலிகளின் தாக்குதல்களை முறியடித்துக் கடல் பலத்தையும், பாதுகாப்பையும் தக்கவைத்துக் கொள்ளும் ஆற்றலும் சக்தியும் இலங்கைக் கடற்படையினரிடம் இருப்பதாகக் கடற்படை அதிகாரியொருவர் தெரிவித்ததுள்ளதாக கொழும்புப் பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

அந்த செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

யுத்த நிறுத்த ஒப்பந்தம் செயற்படுத்தப்பட்ட நாளிலிருந்து விடுதலைப் புலிகள் இலக்காகக் கடற்படையேயுள்ளது.

ஆயுதப் போக்குவரத்து, கடற்புலிகளின் பயிற்சிக் கடற்பயணங்கள் உட்பட கடல் செயற்பாடுகள் தொடர்பாகக் கடற்படையே அவர்களுக்குப் பிரதான தடங்கலாக, அச்சுறுத்தலாக மற்றும் சவாலாக உள்ளது.

கடற்படையினர்மீது விடுதலைப் புலிகள் கடலில் மட்டுமன்றி, தரையிலும் தொடர்ச்சியாகத் தாக்குதல்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடல் தாக்குதல்களுக்கு வெற்றிகரமாக முகம் கொடுத்து வெல்லக் கூடிய திறமையும், பலமும் கடற்படையினரிடம் இருப்பது குதிரைமலை கடற்பரப்பில் நடைபெற்ற மோதலில் உறுதியாகியிருப்பதாக அந்தக் கடற்படையதிகா[illegible] தெரிவித்துள்ளதாக அந்தச் செய்தியில் மேலும் கூறப்பட்டுள்ளது.

# எரிபொருள் நிரப்பு நிலையங்களை தனியாருக்கு விற்பதற்கு அரசு முடிவு

கொழும்பு —

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன எரிபொருள் நிரப்பு நிலையங்களைத் தனியாருக்கு விற்பனை செய்ய அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பொறுப்பில் உள்ள 100 நிலையங்களை அரசாங்க நிதி உதவியுடன் இயங்கும் தனியார் நிறுவனங்களுக்கு வழங்க முடிவு செய்திருப்பதாகப் பெற்றோலிய அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி தெரிவித்துள்ளார்.


இது தொடர்பாக நேற்று முன்தினம் தனியார் நிறுவனத்தினருடன் பெற்றோலிய அமைச்சு செயலாளர் எச்.குணசேகர ஆலோசனை நடத்தியுள்ளார். மொத்தம் 18 தனியார் நிறுவனங்கள் இதற்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பல்வேறு மானியங்களின் மூலமாக இந்தியப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இந்த எரிபொருள் நிரப்பு நிலையங்களைப் பெறுவதைத் தடுக்கும் விதமாகத் தனியார் நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாக பௌசி கூறினார்.

ஆனால், ஜனாதிபதித் தேர்தலின் போது வெளியிடப்பட்ட மகிந்த சிந்தனையில் - பெற்றோலியக் கூட்டுத்தாபன நிறுவனத்தை மேலதிகமாகத் தனியார் மயமாக்கும் முயற்சி கைவிடப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது தற்போது அதற்கு எதிரான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதனால் பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் ஜே.வி.பி தொழிற்சங்கம் அரசாங்கத்தின் இந்த முடிவுக்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

முன்னர் தொழிற்சங்கத்தினருடன் ஆலோசனை நடத்திய போதும் பௌசி பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மேலதிகமாகத் தனியார் மயமமாக்கப்படமாட்டாது என்று உறுதியளித்திருந்தார். தற்போது இத்தகைய முடிவை மேற்கொண்டிருப்பதால் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மீண்டும் ஒரு பாரிய



வேலை நிறுத்த நெருக்கடிக்கு முகம் கொடுக்க நேரிடும் என்று தெரிகிறது.

ஜனாதிபதியாகச் சந்திரிகா குமாரதுங்க இருந்த போது, பலமுறை பெற்றோலியக் கூட்டுத்தாபனப் பங்குகளை இந்தியப் பெற்றோலியக் கூட்டுத் தாபனத்துக்கு விற்பனை செய்யும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

ஆனால், தொழிற்சங்கத்தினரது கடுமையான எதிர்ப்புப் போராட்டங்களால் அந்தமுயற்சி கைவிடப்பட்டது.

தற்போது ஜனாதிபதி மகிந்தவும் அதே முயற்சிகளை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் திருமலையில் அனல்மின் நிலையம்

கொழும்பு —

திருகோணமலையில் அனல் மின் நிலையம் இந்த ஆண்டில் தொடங்கப்படும் என்று மின்சக்தி எரிசக்தி அமைச்சர் டபிள்யூ டி.ஜே.செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

இந்திய அரசாங்கத்துடன் இணைந்து திருகோணமலையில் அனல் மின் உற்பத்தி நிலையத்தை அமைக்க உள்ளதுடன் - அந்தத் திட்டத்தினூடாக முதல் கட்டமாக 500 மெகாவோட் மின்சாரத்தைத் தேசிய மின் திட்டத்தில் சேர்த்துக் கொள்வதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

திருகோணமலையில் அனல் மின் உற்பத்தி நிலையம் இரண்டு கட்டங்களாக மேற்கொள்ளப்படும்.

நுரைச்சோலை அனல் மின் உற்பத்தி நிலைய ஆரம்பகட்டப் பணிகள் எதிர் வரும் 11 ஆம் திகதி தொடங்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# அரசியல் யாப்பு சபையின் உறுப்பினராக முன்னாள் நீதிபதியின் பெயர் பரிந்துரை

கொழும்பு —

அரசியல் யாப்பு சபையின் சர்ச்சைக்குரிய சிறுபான்மைக் கட்சி உறுப்பினர் இடத்துக்கு முன்னாள் தலைமை நீதிபதி ஜி.பி.எஸ்.டி. சில்வாவை சபாநாயகர் லொக்கு பண்டார பரிந்துரைத்துள்ளார்.

ஆனால், இந்தப் பரிந்துரையை ஜே.வி.பி தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஜாதிக ஹெல உறுமய ஆகியவை நிராகரித்துள்ளன.

அரசியல் யாப்பு சபைக்கு ஒரு உறுப்பினரைப் பரிந்துரைக்கும் எமது வாய்ப்பை எதற்காக நாம் விட்டுக் கொடுக்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா கேள்வி எழுப்பியுள்ளார்.

நாம் தமிழர் கட்சியாக இருந்த போதும் றொகான் எதிரிசிங்க மற்றும் ஜயதேவ உயங்கெட ஆகிய இரு சிங்களவர்களை பரிந்துரைத்தோம். ஏன் ஜாதிக ஹெல உறுமயவால் இந்தச் சிங்களவர்களைக் கூட ஏற்க முடியவில்லை. அரசியல் யாப்பு சபையின் ஆறாவது உறுப்பினரைப் பரிந்துரை செய்யும் உரிமை எமக்கு உள்ளது என்றார் மாவை சேனாதிராசா.

இத்தகைய பரிந்துரைகளை சபாநாயகர் மேற்கொள்ளக் கூடாது என்று ஜே.வி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் கருத்துத் தெரிவித்துள்ளார்.

சபாநாயகர் பரிந்துரைக்கலாம் என்று நீதிமன்றம் உத்தரவு பிறப்பிக்கவில்லை என்றும் அவர் சுட்டிக் காட்டினார்..

ஐக்கிய மக்கள் சுதந்திரக் முன்னணியில் அங்கத்துவம் பெற்று தேர்தலில் ஜே.வி.பி போட்டியிட்டது. எனவே, அது சிறுபான்மைக் கட்சியாக உரிமை கோர முடியாது என்று ஜாதிக ஹெல உறுமயவின் அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

# ஐ.நா.மனித உரிமைகுழுவில் இலங்கையும் இடம்பெறுமா?

கொழும்பு —

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைக்குழு உறுப்பினர்களுக்கான தேர்தல் நாளை ந[illegible]டைபெறவுள்ளது.

இந்தக் குழுவின் 13 ஆசிய பிரதிநிதிகளுக்கான தே[illegible]தல் நடைபெறவுள்ளது. ஆனால், இதற்கு மொத்தம் 17 ஆசிய நாடுகள் போட்டியிடுகின்றன.

இந்தப் புதிய மனித உரிமைக் குழுவில் மொத்தம் 47 உறுப்பினர்கள் இடம்பெறவுள்ளனர். முன்னைய மனித உரிமைகள் ஆணைக் குழுவில் 53 பேர் இடம்பெற்றிருந்தனர்.

புதிய மனித உரிமைகள் ஆணைக்குழுவில் இலங்கைக்கு இடம் கிடைத்துவிடும் என்று நம்புவதாக அரசாங்கத்தரப்பினர் தெரிவித்தனர்.

ஆனால், அப்பாவித் தமிழ் மக்களைத் தொடர்ந்து படுகொலை செய்தும், மனித உரிமைகள் ஆணைக் குழுவையே செயலிழக்கச் செய்து வரும் இலங்கை அரசாங்த்தை ஐ.நா.வின் மனித உரிமைகள் ஆணையக் குழுவில் இடம்பெற அனுமதிக்கக் கூடாது என்று ஆசிய மனித உரிமை ஆணையம் உள்ளிட்ட பல்வேறு மனித உரிமைகள் அமைப்புகள் கடும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கிளிநொச்சி,முல்லை வான்பரப்பில் புலிகளின் விமானம் பறந்ததாம்

கொழும்பு —

விடுதலை புலிகளின் விமானமொன்று கடந்த சனிக்கழமை கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு வான்பரப்பில் பறந்துள்ளதையடுத்து, முப்படையினரையும் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகக் கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

கடந்த சனிக்கிழமை முற்பகல் 11.55 மணியளவில் இரணைமடுவிலுள்ள புலிகளின் விமான ஓடுதளத்திலிருந்து மேலெழும்பிய இந்த விமானம் - 10 ஆயிரம் உயரத்தில் பறந்ததான - தகவல் பாதுகாப்பு தரப்பினருக்குக் கிடைத்துள்ளது.

இது குறித்து திருகோணமலை கடற்படை அதிகாரிக்குக் கிடைத்த தகவலுக்கமைய இது பற்றி விமானப்படைக்கு அறிவித்து, முல்லைத்தீவு கடற்பகுதியில் கடற்படையினரின் படகுகளும் தயார்நிலையில் வைக்கப்பட்டிருந்தன.

இந்த விமானம் அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு வந்தால், அதன் மீது தாக்குதல் நடத்துவதற்கு கடற்படையைப் போன்று விமானப்படையும் விமானங்களைத் தயார் நிலையில் வைத்திருந்ததாக விமானப்படையின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

எனினும், இந்த விமானம் அரச கட்டுப்பாட்டுப் பகுதியைத் தவிர்த்து, கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு பிரதேச வான்பரப்பில் பல நிமிடங்கள் பறந்துவிட்டு, மீளவும் இரணைமடு தளத்தில் தரையிறங்கியுள்ளது.

படையினருக்குக் கிடைத்த தகவலுக்கமைய மேலும் இதுபோன்ற விமானமொன்று இரணைமடு தளத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது தெரியவந்தது.

இந்த விமானம் ஏதாவது தாக்குதலை நடத்தினால், அதற்கு பதில் தாக்குதலை நடத்துவதற்கு முப்படைகளையும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகப் படை அதிகாரி ஒருவர் தெரிவித்ததாக அந்த செய்திகள் மேலும் தெரிவித்தன. (தே)

# போர்நிறுத்த உடன்பாட்டின் நிலை ஜெனிவா பேச்சின் பின்னரே தெரியும்

## என்கிறார் ஹரி குணதிலக

கொழும்பு —

போர்நிறுத்த உடன்படிக்கை இது வரை முறிந்துவிடவில்லை. ஜெனிவாவில் இரண்டாம் சுற்றுப் பேச்சில் விடுதலைப்புலிகள் பங்கேற் பார்களா என உறுதியாகக் கூறமுடியாது.

எனவே, போர்நிறுத்த உடன்படிக்கையைத் தொடர்ந்து முன்னெடுப்பதா என்பது இதன் பின்னரேயே தீர்மானிக்க முடியுமென முன்னாள் விமானப்படைத் தளபதி எயார் வைஸ் மார்ஷல் ஹரி குணதிலக தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது -

கொழும்பில் குண்டுவெடிப்பு நிகழ்ந்த பின்னரே நாம் அதிகம் கலக்கமடைந்துள்ளோம். ஆனால், வடக்கு - கிழக்கில் நாளாந்தம் ஐந்து, ஆறு பேர் உயிரிழக்கும் சூழலுள்ளது. நீண்டகாலத்துக்குப் பின்னரே கொழும்பில் குண்டுத் தாக்கல் நடைபெற்றுள்ளது.

ஜெனிவா முதல் சுற்றுப் பேச்சில் போர்நிறுத்த அமுலாக்கம் குறித்தே பேசப்பட்டது. கருணா உட்பட ஏனைய ஆயுதக் குழுக்களை நிராயுதபாணிகளாக்குவதற்கும், தமிழ் மக்களது கொலைகளை நிறுத்துவதற்கும், விடுதலைப்புலிகளுக்கும், அரசுக்குமிடையே உடன்பாடு காணப்பட்டது. அதனை அரசு செய்யாவிடின், தாம் செய்வதாக விடுதலைப்புலிகள் தெரிவித்தனர்.

தற்போது விடுதலைப் புலிகள் அதனையே செய்து[illegible]ளனர்.

ஜெனிவா பேச்சில் உடன்பட்ட விடயங்களை அரசாங்கம் செயற்படுத்துகின்றதா என்பதனை சர்வதேச சமூகம் பார்த்துக்கொண்டிருக்கிறது. கொழும்பில் இராணுவத் தளபதியைக் கொல்வதற்கு விடுதலைப் புலிகள் முற்பட்டது எமக்குப் பெரும் அதிர்ச்சியாக இருந்தாலும், சர்வதேச சமூகம் அதனைவிட அவதானமாக இருப்பது பேச்சுவார்த்தையின் இணக்கப்பாடு செயற்படுத்தப்படுகின்றதா என்பது பற்றியே.

இராணுவத் தளபதியைக் கொல்வதற்கு முயற்சிப்பது அசாதாரணமானதென அவர்கள் கூறுவர் என அவர் மேலும் தெரிவித்தார். (தே)

# கண்ணிவெடி அகற்றும் பணியை நிறுத்தி கொரைசன் நிறுவனம் வெளியேறியது

மன்னார் —

மன்னார் வங்காலை பகுதியில் கண்ணிவெடி அகற்றும் பணிகளில் ஈடுபட்டிருந்த கொரைசன் நிறுவனம் அங்கிருந்து வெளியேயுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கொரைசன் எனப்படும் இந்திய நிறுவனம் கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக வங்காலையில் இரத்தினபுரி, சுவர்னபுரி, தோமஸ்புரி பகுதிகளில் கண்ணிவெடி அகற்றும் பணிகளில் ஈடுபட்டுவந்தது. இதனால் கண்ணிவெடி அகற்றும் காரணமாக இடம் பெயர்ந்திருந்த இந்தப் பகுதிகளில் அண்மைக்காலங்களாக வட கிழக்கு பகுதிகளில் தொடர்ச்சியாக ஏற்படும் வன்முறை சம்பவங்கள் காரணமாக கொரைசன் நிறுவனம் கடந்த வாரம் இந்தப் பகுதியில் இருந்து வெளியேறுயுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இதேசமயம் தற்பொழுது நிலவும் சூழ்நிலையில் தங்களின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு மீண்டும் சுமூகநிலை ஏற்படும் பட்சத்தில் மீளவும் தாங்கள் கண்ணிவெடி அகற்றும் பணிகளை தொடரவுள்ளதாகவும் கொரைசன் நிறுவனம் தெரிவித்துள்ளது.

மன்னார் வங்காலைப்பகுதியில் கொரைசன் நிறுவனம் மேற்கொண்டிருந்த கண்ணிவெடி அகற்றும் பணிகள் அனைத்தும் பூர்த்தியடைந்துள்ளது.

இந்த நிலையில் குறித்த நிறுவனத்தின் மூலம் மாவட்டத்தின் கண்ணிவெடி அபாயமுள்ள வேறு பிரதேசங்களில் கண்ணிவெடி அகற்றுவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. இந்தச் சூழ்நிலையிலேயே கொரைசன் நிறுவனம் பாதுகாப்பு காரணங்களுக்காக வெளியேறியுள்ளதாக மன்னார் அரசாங்க அதிபர் வி.விஸ்வலிங்கம் தெரிவித்தார்.

இதேவேளை மன்னார் மாவட்டத்தில் கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ள எப்.என்.டி நிறுவனம் தொடர்ந்தும் தமது பணிகளை மேற்கொண்டுவருகின்றது. (மோ)

# ஈழநாதம் உதவி ஆசிரியருக்கு நாட்டுப்பற்றாளர் கௌரவம்



கிளிநொச்சி —

மோட்டார் சைக்கிள் விபத்து ஒன்றில் சிக்கி உயிரிழந்த ஈழநாத வார வெளியீட்டின் உதவி ஆசிரியரான கனகரட்ணம் ஜெயசீலனுக்கு விடுதலைப்புலிகளால் நாட்டுப்பற்றாளர் கௌரவம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை கிளிநொச்சி டிப்போ வீதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் சிக்கி படுகாயமடைந்த இவர் கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வந்த வேளை சிகிச்சை பலனளிக்காத நிலையில் நேற்றுமுன்தினம் வைத்தியசாலையில் உயிரிழந்தார்.

இவர் தமிழ்த் தேசியத்துக்கு வலுச்சேர்க்கும் வகையில் கட்டுரைகள் படைத்துள்ளார்.

இவரால் தமிழ்த் தேசியத்துக்கு ஆற்றப்பட்ட சேவைக்காக விடுதலைப்புலிகளால் நாட்டுப்பற்றாளர் கௌரவம் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# ஒன்றரை கோடி பெறுமதியான ஹெரோயின் கைப்பற்றப்பட்டது

மன்னார் —

மன்னார் - தலைமன்னார் வீதியில் உள்ள வங்காலைப்பாடு எனும் இடத்தில் 1 1/2 கோடி ரூபா பெறுமதியான ஹெரோயின் போதைப் பொருள் கடற்படையிடம் சிக்கியது.

மேற்படி சம்பவமானது நேற்று முன்தினம் இடம்பெற்றது. இந்தியாவிலிருந்து சிறிய படகொன்றின் மூலம் கடத்தி வந்த போதைப் பொருட்களுடன் வங்காலைப்பாடு கடற்கரையில் தரையிறங்க முயன்ற வேளை குறித்த படகின் மீது சந்தேகம் கொண்ட கடற்படையினர் அந்தப் படகை சுற்றி வளைத்தனர்.

கடற்படையினர் படகைச் சுற்றி வளைத்த போது குறித்த படகிலிருந்த 3 நபர்களும் தப்பி ஓடிவிட்டனர்.

இந்த நிலையில் அந்தப் படகிலிருந்து சுமார் மூன்றரை கிலோ ஹெரோயின் போதைப்பொருளைக் கடற்படையினர் கைப்பற்றினர். (மோ)

# கிளிநொச்சி மாவட்ட செயலகக் கூட்டங்கள்

கிளிநொச்சி —

கிளிநொச்சி மாவட்ட அத்தியாவசிய சேவைகள் குழுக்கூட்டம் எதிர்வரும் 9 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

இதனைத் தொடர்ந்து பிற்பகல் 2.00 மணிக்கு விவசாயக்குழுக் கூட்டமும் நடைபெறும். எனவே சம்பந்தப்பட்ட அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்வதாக மாவட்ட அரசாங்க அதிபர் தி.இராசநாயகம் தெரிவித்தார்.

# திருமலையில் கண்டனப் பேரணி

திருகோணமலை —

திருமலை மூதூர் கிழக்கில் நடைபெற்ற படுகொலைகளையும், உதயன் பத்திரிகைக் காரியாலயம் மீதான தாக்குதலையும் கண்டித்து பேரணியொன்று பூநகரி முழங்காவிலில் நடைபெற்றது.

அரசசார்பற்ற நிறுவனங்கள் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம், பாடசாலை மாணவர்கள் பிரதேச வர்த்தகர்கள் இணைந்து நேற்று முன்தினம் இந்தப் பேரணியை நடத்தினர்.

நாச்சிக்குடாச் சந்தியிலிருந்து ஆரம்பமான இந்தப் பேரணி முழங்காவில் மாவீரர் கலையரங்கைச் சென்றடைந்து அங்கு கண்டனக் கூட்டம் இடம் பெற்றது.

# சிலாவத்துறையில் படையினர் நடமாட்டம் ஆலயங்களில் பொது மக்கள் தஞ்சம்

மன்னார் —

ஆழ ஊடுருவித் தாக்கும் படையினரின் தாக்குதலை அடுத்து மன்னார் மாவட்டத்தின் சிலாவத்துறை, முள்ளிக்குளம் பகுதிகளைச் சேர்ந்த பெரும்பாலான தமிழ் குடும்பங்கள் இரவு நேரங்களில் ஆலயங்களில் தஞ்சம் புகுவதாக மன்னார் தகவல்கள் தெரிவித்தன.

சிலாவத்துறை - சவேரியார்புரம் பகுதியில் உள்ள பொதுமகன் ஒருவரின் வீட்டின் மீது கடந்த செவ்வாய் கிழமை இரவு 10.30 மணியளவில் கைக்குண்டு தாக்குதலும், துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டது.

இந்தச் சமயத்தை தொடர்ந்து. சிலாபத்துறை, முள்ளிகுளம், அரிப்பு பிரதேச மக்களிடையே கடும் பதற்றமும், பீதியும் நிலவுகிறது. மேலும் இந்தப் பிரதேசங்களில் இரவு நேரங்களில் சந்தேகத்துக்குரிய மர்ம நபர்களின் நடமாட்டமும், பொதுமக்களினால் அவ்தானிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை சிலாவத்துறையில் கைக்குண்டு வீச்சொன்றும் இடம் பெற்றது.

இதனையடுத்து இரவு நேரங்களில் தமது பாதுகாப்பைக் கருதி சிலாவத்துறையைச் சேர்ந்த தமிழ் குடும்பங்கள் சவேரியார் புரத்திலுள்ள புனித சவேரியார் ஆலயத்திலும் தங்கிவருவதாக தெரியவருகின்றது.

மேலும் படையினரின் தாக்குதல் பீதிகாரணமாக அதிகாலையில் கடற்தொழிலுக்குச் செல்லமுடியாத நிலையும் இவர்களுக்கு ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

சிலாவத்துறை, அரிப்பு, முள்ளிக்குளம் பகுதி மக்களின் நிலை குறித்து அரிப்பு பகுதி பிரமுகர்கள், மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு ஜேசெப் ஆண்டகையிடம் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, இந்த விடயம் குறித்து தமிழீழ விடுதலைப் புலிகளின் கவனத்துக்கும் அந்தப் பகுதி மக்கள் கொண்டு வந்துள்ளனர். (மோ)

# வவுனியாவில் 116 பேர் போராட்டத்தில் இணைவு

கிளிநொச்சி —

வவுனியா மாவட்டத்தில் 116 பேர் தாயக விடுதலைப் போராட்டத்தில் தம்மை முழுமையாக நேற்றுமுன்தினம் இணைத்துக் கொண்டதாக வவுனியா மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் ஞானம் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் கனகராயன்குளத்தில் நடைபெற்ற சமகால அரசியல் தொடர்பான கருத்தரங்களில் தற்போதைய நிலை தொடர்பாக மக்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது. அதன் பின்னர் நிலைமையைப் புரிந்து கொண்ட 116 பேர் தம்மை முழுமையாக தாயக விடுதலைப் போராட்டத்தில் இணைந்துக் கொண்டனர். இந்த நிகழ்வில் பெருமளவான மக்கள் கலந்து கொண்டனர்.

இதேவேளை மன்னார் அடம்பன் போன்ற பகுதிகளிலும் பெருமளவானவர்கள் தாயக விடுதலைப் போராட்டத்தில் இணைந்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# கேணல் கிட்டுவின் ஓவியங்கள் கையடக்கத் தொகுப்பு வெளியீடு

கிளிநொச்சி —

ஓவியர் மூத்த தளபதி கேணல் கிட்டுவின் ஓவியங்களின் கையடக்கத் தொகுப்பு வெளியீடும், ஓவியக்காட்சி ஆரம்ப நிகழ்வும் இன்று காலை 9.00 மணிக்கு கிளிநொச்சி நுண்கலைக்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

மூத்த தளபதி கேணல் கிட்டு வரைந்த ஓவியங்களின் படங்கள் பொறிக்கப்பட்ட கையடக்கத் தொகுதி வெளியீட்டு வைக்கப்படவுள்ளது. தொடர்ந்து இளம் ஓவியர் சோ.சி.கலைக்கதிரின் ஓவியக்காட்சி ஆரம்பித்து வைக்கப்படும். இன்றும், நாளையும் இந்த ஓவியக்காட்சி இடம்பெறும்.

நுண்கலைக் கல்லூரியில் ஓவியர் கிட்டுவின் ஓவிய கையடக்கத் தொகுப்பைப் பெற்றுக் கொள்ளமுடியும் என நுண்கலைப்பிரிவின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

# மன்னார் நகரப் பகுதியில் படையினர் கடும் சோதனை

மன்னார் —

மன்னார் நகரில் நேற்றுமுன்தினம் காலையும், மதியமும் இரண்டு தடவைகள் படையினரின் சோதனைகள் இடம்பெற்றன.

பொலிஸாரும், இராணுவத்தினரும் கூட்டாக இணைந்தே இதனை மேற்கொண்டனர்.

அண்மைக்காலமாக வவுனியா நகரில் நடைபெற்றுவரும் கிளைமோர் மற்றும் கைக்குண்டுத் தாக்குதல் சம்பவங்கள் மன்னாரிலும் பரவாமல் தடுக்கும் நோக்கிலேயே சோதனை நடவடிக்கைகள் அடிக்கடி இடம் பெற்றுவருவதாக படைத்தரப்பினர் தெரிவித்தனர்.

இந்தச் சோதனைகளின் போது அனைத்துக் கடைகளும் சோதனையிடப்பட்டதுடன், கடைகளில் வேலை செய்வோர் மற்றும் படையினரால் சந்தேகிக்கப்பட்ட நபர்களிடம் அடையாள அட்டையும் பரிசோதிக்கப்பட்டது.

கடைகளைச் சோதனையிட்ட படையினர் கடையில் வேலை செய்வோர் தவிர்ந்த தேவையற்ற நபர்களைக் கடைக்குள் வைத்திருக்க வேண்டாமெனவும் எவரேனும் கடைக்குள் ஏதாவது பொதிகளை வைக்கக் கோரினால் அனுமதிக்க வேண்டாமெனவும் கடை உரிமையாளர்களைப் பணித்துள்ளனர்.

நகருக்கு வந்திருந்த கணிசமானோர் இந்தச் சோதனை நடவடிக்கைகள் காணமாக நண்பகலுடன் நகரைவிட்டு வெளியேறி விட்டதால், வர்த்தக நடவடிக்கைகள் யாவும் முடங்கிக் கிடந்தன. (மோ)

# குளப் புனரமைப்பு குறித்து விளக்கவுரைக் கூட்டம்

துணுக்காய் —

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவிலுள்ள அனிஞ்சியன் குளம் 30 இலட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டுள்ளது.

நியாப் 11 திட்டத்தின் கீழ் புனரமைக்கப்படவுள்ள இந்தக் குளம் தொடர்பாக மக்களுக்கு விளக்கமளிக்கும் கூட்டம் வவுனிக்குள நீர்ப்பாசன பொறியியலாளர் கு.தவக்குமார் தலைமையில், அனிஞ்சியன் குள பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெற்றது.

துணுக்காய் பிரதேச செயலாளர் நா. நந்தகுமார், துணுக்காய் பிரதேச பொருண்மிய மேம்பாட்டு நிறுவன இணைப்பாளர் கி.அமலன் ஆகியோர் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு குளம் புனரமைப்புத் தொடர்பாக விவசாயிகளுக்கும், விவசாய அமைப்புக்களுக்கும் விளக்கமளித்தனர்.

# நடமாடும் மருத்துவ சேவை

கிளிநொச்சி —

தமிழீழ சுகாதார சேவையின் நடமாடும் மருத்துவ சேவைப்பிரிவு இந்த ஆண்டுடன் 14 ஆண்டுகளைப் பூர்த்தி செய்கிறது.

இந்த நடமாடும் மருத்துவ சேவைப்பிரிவு 1992 ஆம் ஆண்டு மே மாதம் 14 ஆம் திகதி தொடக்கம் வன்னிப் பெருநிலப்பரப்பில் தனது சேவையை மேற்கொண்டுவருகின்றது.இந்த மருத்துவ சேவையை வைத்தியர் தேவா அன்ரி நீண்ட காலம் தனியே நடத்தி வந்தமை குறிப்பிடத்தக்கது.

# வீதிச் சோதனை படையினர் இளைஞர் மீது துப்பாக்கி சூடு

வவுனியா —

வவுனியாவில் வீதிச் சோதனையில் ஈடுபட்டிருந்த படையினர் இளைஞர் ஒருவர் மீது மேற்கொண்ட துப்பாக்கி பிரயோகத்தை அடுத்து அந்தப் பகுதியில் பெரும் பதற்ற நிலை உருவாகியது.

வவுனியா இரண்டாம் குறுக்குத் தெரு வீதியில் சோதனையில் ஈடுபட்டிருந்த வேளை அந்த வீதியால் வந்த இளைஞர் ஒருவர் திரும்பிச் செல்ல முற்பட்ட வேளையில் படையினர் துப்பாக்கி பிரயோகம் செய்தனர். இதனால் வவுனியா நகரில் உள்ள வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டன.

இதனால் மக்கள் சிதறி ஓடினர். இதனையடுத்து வவுனியா நகர் வெறிச்சோடிக் காணப்பட்டது. சில வர்த்தக நிலையங்கள் திறந்திருந்த போதிலும் நண்பகலுக்குப் பின்னர் அவையும் மூடப்பட்டன. படையினரின் துப்பாக்கிப் பிரயோகத்தின் போது எவரும் காயமடையவில்லை என தெரிவிக்கப்படடுள்ளது.

# சுனாமி அனர்த்த மீள்கட்டுமானத்தை செப்ரெம்பருக்குள் முடிக்க வேண்டும்

## அரச அதிபர் பணிப்புரை

யாழ்ப்பாணம் —

யாழ். குடாநாட்டில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீள்கட்டுமானப் பணிகளை செப்ரெம்பர் மாதத்துக்கு முன் முடிக்க வேண்டுமென தொண்டர் நிறுவனங்களுக்கு யாழ். அரச அதிபர் பணிப்புரை விடுத்துள்ளார்.

கடந்த 2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீள் கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட வேலைத் திட்டங்கள் நடைபெற்று வருகிறது.

பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் இதுவரை 2510 வீடுககள் முற்றாக நிர்மாணிக்கப்பட்டுள்ளன. ஏனைய வீடுகள் நிறைவடையும் நிலையில் உள்ளன. ஒவ்வொருவீடுகளும்ஏழரை லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

மழைகாலம் தொடங்குவதற்கு முன்னர் பணிகள் முழுமையாக முடிவடைய வேண்டும்.

இந்தப் பகுதிகளில் குடி நீர் மலசல கூட பிரச்சினைககளும் ஏற்படாமல் இருக்கக் கூடிய வகையில் தொண்டர் நிறுவனங்களின் சேவை அமைய வேண்டும் என்றும் அவர் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த ஒன்றரை வருடங்களுக்குப் பின்னரும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய வசதிகள் எதுவும் செய்து கொடுக்கப்படாத நிலையுள்ளதாக மக்கள் விசனம் தெரிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது.




சாவகச்சேரி புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலையத்தின் 11 ஆவது வருடாந்த பொதுக்கூட்டத்தில் நிலையத் தலைவர் வை.இராசரத்தினம் உரையாற்றுவதையும், சிறுவர் நன்னடத்தை நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் க.தீபா, நிலையச் செயலாளர் ப.நடராசா ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

# ஒப்பந்த ஆங்கில ஆசிரியர்கள் 227 பேருக்கு நிரந்தர நியமனம்

யாழ்ப்பாணம் —

வடக்கு - கிழக்கில் ஒப்பந்த ஆங்கில ஆசிரியர்களாகக் கடமையாற்றிய 227 பேருக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவுள்ளதாக தமிழர் ஆசிரியர் சங்க பொது செயலாளர் மகாசிவம் தெரிவித்தார்.

கடந்த வருடம் ஜூன் மாதம் 30 ஆம் திகதிவரை இந்தப் பிரதேசத்தில் கடமையாற்றியவர்களுக்கே நிரந்தர நியமனம் கிடைத்துள்ளது . ஒப்பந்த ஆங்கில ஆசிரியர்களின் நிரந்தர நியமனம் தொடர்பாக கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்தவுடன், தான் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுத்ததன் பலனாகவே 227 பேருக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவுள்ளதாக தெரிவித்த அவர் - இந்த நிரந்தர நியமனத்தின் போது - ஏற்கனவே இடம்பெற்ற நிரந்தர நியமனத்தில் விடுபட்ட 54 பேருக்கும் நியமனம் வழங்கப்படவிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஒப்பந்த ஆங்கில ஆசிரியர்களின் நிரந்தர நியமனம் மற்றும் தொண்டர் ஆசிரியர்கள் நியமனம் என்பன நீண்ட காலமாக தாமதிக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

## மஹோற்சவம்

மூளாய் —

மூளாய் வரதன்புலோ ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் கடந்த முதலாம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

எதிர்வரும் 11 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் வெள்ளிக்கிழமை தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம் —

க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்காக பல்கலைக்கழக விரிவுரையாளர்களால் நடத்தப்படும் பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு - அளவெட்டி அருணோதயக் கல்லூரியில் இன்று காலை 9 மணிமுதல் பிற்பகல் 1 மணி வரை நடைபெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களை பங்குபற்றி பயன்பெறுமாறு கல்லூரி சமூகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

# அத்தியாவசிய பொருட்கள் அதிக விலையில் விற்பனை

யாழ்ப்பாணம் —

குடாநாட்டின் தற்போதைய அசாதாரண சூழ்நிலையை பயன்படுத்தி அத்தியவசியப் பொருட்களை பதுக்கல், அதிக விலைக்கு விற்றல் போன்ற நடவடிக்கைகள் அதிகரித்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

குறிப்பாக பெற்றோல், மண்ணெண்ணெய், டீசல், என்பவற்றை பதுக்கி அதிக விலைக்கு விற்கப்படுகின்றன.

இதனால் பொதுமக்கள் அவற்றை அதிக விலைக்கு வாங்கவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. அத்துடன் குடாநாட்டில் உள்ள எரிபொருள் விற்பனை நிலையங்களில் எரிபொருட்களை பெற்றுக்கொள்வதற்காக கொள்கலன்கள் சகிதம் நீண்ட வரிசையில் காத்து நிற்பதை அவதானிக்கூடியதாக உள்ளது.

இதேவேளை, பெற்றோல் உள்ளிட்ட எரிபொருட்கள் யாவும் போதிய கையிருப்பில் இருப்பதாக பெற்றோலியக் கூட்டுத்தாபன யாழ். அலுவலகம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

குடாநாட்டில் உள்ள சந்தைகளில் மரக்கறி மற்றும் மீன்களின் விலைகள் உயர்வடைந்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது ஏற்பட்டிருக்கும் சூழ்நிலையால் போக்குவரத்து பிரச்சினைகள், தொழிலாளர்களின் வரவு குறைவு என்பவையே இந்த திடீர் விலையுயர்வுக்கு காரணம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.



கரவெட்டி யார்க்கரு விநாயகர் வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியின் போது பிரதம விருந்தினராக வருகைதந்த சிறுவர் பாதுகாப்பு நிறுவன கல்விசார் திட்ட முகாமையாளர் வைத்திய கலாநிதி பேரின்பநாதன், கரவெட்டி கோட்டக் கல்வி அதிகாரி அம்பலவாணர் ஆகியோர் மலர் மாலையிட்டு வரவேற்பதையும், பாடசாலை அதிபர் கணபதிப்பிள்ளை மங்கள விளக்கேற்றி நிறைவுசெய்வதையும் காணலாம் . (12)

# போக்குவரத்துச் செய்வதில் பொதுமக்கள் பெரும் சிரமம்!

யாழ்ப்பாணம் —

யாழ். குடாநாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக உயர்பாதுகாப்பு வலயப் பகுதிகளுக்கான போக்குவரத்து மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

தெல்லிப்பளை மாவட்ட வைத்தியசாலை மற்றும் யூனியன், மகாஜனா கல்லூரிகளுக்கு செல்லும் மாணவர்களும், நோயாளர்களும் தெல்லிப்பளை சோதனைச்சாவடியூடாக போக்குவரத்து மேற்கொள்ளும்போது சோதனைச் சாவடியில் படையினர் பலத்த சோதனைக் கெடுபிடிகளின் பின்னரே தொடர்ந்து செல்ல அனுமதிக்கப்படுகிறது.

அதேவேளை, இந்தப் பகுதியூடாக உள்ளே நுழைந்தவர்களை சைக்கிள் மற்றும் மோட்டார் சைக்கிள், போக்குவரத்து சபை பஸ்கள் என்பன சோதனைச்சாவடியில் நிறுத்தி வைக்கப்பட்டு படையினர் தமது வாகனங்களிலேயே பயணிக்க அனுமதிக்கின்றனர். இதனால் அச்சமடைந்துள்ள வர்கள் உயர்பாதுகாப்பு வயைங்களுக்கான போக்கு வரத்தை குறைத்து வருகின்றனர்.

இதேவேளை, காங்கேசன்துறை வீதியூடாக வாகனங்களில் செல்வோர் நீண்டநேரமாக தடுத்துவைக்கப்பட்ட பின்பே செல்வதற்கு படையினர் அனுமதிப்பதும் குறிப்பிடத்தக்கது. (68)

# தென்மராட்சி பிரதேச செயலக கலை இலக்கிய போட்டி முடிவுகள்

சாவகச்சேரி —

தென்மராட்சி பிரதேச செயலக மட்டத்தில் நடத்தப்பட்ட கலை இலக்கியப் போட்டியில் வெற்றிபெற்றோர் விபரம் வருமாறு -

**கட்டுரை (சிரேஷ்ட பிரிவு)**

குணரத்தினம் ஜெயமோகன் (கைதடி வீரகத்திப் பிள்ளையார் அறநெறிப் பாடசாலை)

**கட்டுரை (கனிஷ்ட பிரிவு)**

மதுவந்தி பஞ்சாட்சரம் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), வரதராஜா ஜெசிந்தன் (மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயம்), நித்தியா குணசேகரன் (சாவகச்சேரி மகளிர் கல்லூரி)

**சிறுகதை**

வயிரமுத்து சின்னப்பா (தனங்களப்பு), தி.உதயலதா (கைதடி), தே. பஞ்சாட்சரம் (கொடிகாமம்)

**கவிதை**

ஜெந்துஜா கணேசலிங்கம் (சாவகச்சேரி மகளிர் கல்லூரி), சிவராசா உதயதீபன் (அறநெறிப் பாடசாலை, மட்டுவில்)

**காவியம்**

நடராஜா புகன்சிறிந்திரன் (சாவகச்சேரி), சிவகுமார் சிவாகர் (கல்வயல்), தி.உதயலதா (கைதடி), சி. காசிப்பிள்ளை (அல்லாரை), சிவகுமார் சிவரூபன் (கல்வயல்).

# வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றல்

யாழ்ப்பாணம் —

மாநகரசபை எல்லைக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய் தடுப்பூசி இரண்டாவது கட்டமாக கீழ்வரும் நிலையங்களில் ஏற்றப்படவுள்ளதாக யாழ். மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

எதிர்வரும் 9 ஆம் திகதி அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தில் பிற்பகல் 2 மணி முதல் 3.30 மணிவரையும், மறுநாள் காலை 8 மணி முதல் 10.30 மணிவரை நாவலர் கலாசார மண்டபத்திலும், முற்பகல் 11 மணி முதல் 12.30 மணிவரை யாழ். சன்மார்க்க ஐக்கிய வாலிபர் சங்கத்திலும், பிற்பகல் 2 மணி முதல் 3.30 மணிவரை கன்னாதிட்டி காளிகோவிலடியிலும்,

16 ஆம் திகதி காலை 8 மணி முதல் 10.30 மணிவரை லங்கா சித்த ஆயுர்வேத நிலையத்திலும், முற்பகல் 11 மணி முதல் 12.30 மணிவரை அத்தியடி பிள்ளையார் கோவிலடியிலும், பிற்பகல் 2 மணி முதல் 3.30 மணிவரை இராசாவின் தோட்டம் அருள்மாதா சனசமூக நிலையத்திலும்,

17 ஆம் திகதி காலை 8 மணி முதல் 10.30 மணிவரை யாழ். ஞானக் குழந்தை இல்லத்திலும், முற்பகல் 11 மணி முதல் 12.30 மணிவரை கொட்டடி முத்தமிழ் சனசமூக நிலையத்திலும், பிற்பகல் 2 மணி முதல் 3.30 மணிவரை நீராவியடி சனசமூக நிலையத்திலும்,

18 ஆம் திகதி காலை 8 மணி முதல் 10.30 மணிவரை வள்ளுவர் சனசமூக நிலையத்திலும், முற்பகல் 11 மணி முதல் 12.30 மணிவரை நாவாந்துறை காமாட்சி சனசமூக நிலையத்திலும், பிற்பகல் 2 மணி முதல் 3.30 மணிவரை பிறை பாலர் பாடசாலையிலும்,

19 ஆம் திகதி காலை 8 மணி முதல் 10.30 மணிவரை கில்னர் வீதி பாலர் பாடசாலையிலும், பிற்பகல் 2 மணி முதல் 3.30 மணிவரை சீனி வாசகம் சனசமூக நிலையத்திலும்,

24 ஆம் திகதி காலை 8 மணி முதல் 10.30 மணிவரை நாவாந்துறை சென். நீக்கிலஸ் சனசமூக நிலையத்திலும், காலை 11 மணி முதல் 12.30 மணிவரை ஒஸ்மானியா கல்லூரியிலும், பிற்பகல் 2 மணி முதல் 3.30 மணிவரை அண்ணா சனசமூக நிலையத்திலும்,

25 ஆம் திகதி காலை 8 மணி முதல் 10.30 மணிவரை குருநகர் அறிவொளி சனசமூக நிலையத்திலும், காலை 11 மணி முதல் 12.30 மணிவரை குருநகர் சனசமூக நிலையத்திலும்,

30 ஆம் திகதி காலை 8 மணி முதல் 12.30 மணிவரை சென். செபஸ் சனசமூக நிலையத்திலும், பிற்பகல் 2 மணி முதல் 3.30 மணிவரை தொடர்மாடி சனசமூக நிலையத்திலும் வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

# இரவுநேர மீன்பிடித்தலுக்கு படையினர் அனுமதி மறுப்பு

கொக்குவில் —

குருநகர் இறங்குதுறை இராணுவ சோதனைச் சாவடியூடாக கடந்த வெள்ளிக்கிழமை இரவு கடற்தொழிலுக்கு செல்வதற்கு மீனவர்களை அனுமதிக்கவில்லை என்று குருநகர் கடற்தொழிலாளர்கள் தெரிவித்தனர்.

எனினும், மறுநாளான சனிக்கிழமை காலை 6 மணிக்குத்தான் மீன்பிடிக்கு தொழிலாளர்கள் கடலுக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டனர். இதனால் தொழில் பாதிக்கப்பட்டுள்ளதாக அவர்கள் கவலை தெரிவித்தனர்.

சுமுகமான சூழல் இருந்த காலங்களில் அதிகாலை 3 மணிக்கு அனுமதித்து வந்த படையினர் சமீபகாலங்களில் இரவு ஒரு மணி நேரம் வரை அனுமதித்து வந்ததாகவும் - அந்த நிலைமை தற்போது மாற்றப்பட்டிருப்பதால் இனியும் விடிந்த பின்பே தொழிலுக்கு அனுமதிக்கும் நிலை நீடித்தால் கடற்தொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கப்படுவரெனவும் கூறப்படுகிறது. (206)

# விண்ணப்பப் படிவங்களை ஒப்படைக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம் —

யாழ். மாவட்டத்தில் விசேட தேவைக்கு உட்பட்டோருக்கான பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படஇருப்பதாக மேலதிக அரச அதிபர் ஆ. சிவசுவாமி தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்திலுள்ள விசேட தேவைக்கு உட்பட்டோரின் நலன் கருதியும், அவர்களின் எதிர்கால தொழில் முயற்சிகளைக் கருத்தில்கொண்டும் இந்தப் பயிற்சி வகுப்புக்கள் இடம்பெறவுள்ளன.

பயிற்சி வகுப்புகளில் சிற்பம், இசை உள்ளிட்ட துறைகளில் பயிற்சி அளிக்கப்படும்.

பயிற்சி நிறைவில் சான்றிதழ்கள் வழங்கப்படுவதோடு தொழில் முயற்சிகளும் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

பயிற்சி வகுப்புகளில் கலந்து கொள்ள விரும்புபவர்கள் இந்த மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னதாக சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களை தத்தமது பிரதேச செயலகங்களில் சமர்பிக்கும்படி மேலதிக அரச அதிபர் கேட்டுள்ளார்.

# சர்வதேசம் வழங்கிய ஆயுதங்களால் மக்களை படுகொலை செய்கிறது அரசு

## ஜே.வி.பியின் முன்னாள் உறுப்பினர் கடிதம்

சர்வதேச நாடுகளால் இலங்கையிலுள்ள பொறுப்பற்ற அரசாங்கத்துக்கு வழங்கிய ஆயுதங்களைக் கொண்டு சொந்த நாட்டு மக்களாகிய தமிழர்கள் மீது முப்படைத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளது என்று முன்னாள் ஜே.வி.பி உறுப்பினர் டொக்டர் பிறையன் செனிவிரட்ன கண்டனம் தெரிவித்துள்ளார்.

அவுஸ்ரேலியாவில் வசித்து வரும் பிறையன் செனிவிரட்ன இது தொடர்பாக சர்வதேச நாடுகளுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார். இந்தக் கடிதத்தில் மேலும் - மனிதாபிமான உதவிகளுக்கான வேண்டுகோள் அல்ல இது. முறைப்பாடும் அல்ல. இலங்கையில் என்ன நடக்கிறது என்பது குறித்து சர்வதேச அரசாங்கங்கள், சர்வதேச ஊடகங்கள், மதத் தலைவர்கள் மற்றும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களின் தலைவர்கள் அறிந்து கொள்வதற்காகத்தான். குறிப்பாக இதில் தலையிட வேண்டும் என்பதற்காக இது வெளியிடப்படவில்லை.



இலங்கையில் என்ன நடைபெறுகிறது. என்ற உண்மையை வெளிப்படுத்தும் நோக்கில் இது வெளியிடப்படுகிறது.

கொழும்பில் ஏப்ரல் 25 ஆம் திகதி இராணுவத் தலைமையகத்தில் பெண் தற்கொலை குண்டுதாரி இராணுவ மருத்துவமனைக்குச் சென்றுள்ளார். இலங்கையின் மிளக அதியுயர் பாதுகாப்பு வலயங்களில் உள்ள மிக முக்கியமான பகுதி இது. 100 வீத சிங்களவர்களைக் கொண்ட இராணுவத்தினரது உள் உதவியின்றி அந்தப்பெண் உள்ளே சென்றிருக்க முடியாது.

இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்காக தாத்திருந்த பெண், அவரது வாகனம் முன்பாக தனது குண்டுகளை வெடிக்கச் செய்துள்ளார். இதில் இராணுவ தளபதியினது 5 பாதுகாவலர்கள் கொல்லப்பட்டனர். சரத் பொன்சேகா படுகாயமடைந்து உயிர் பிழைத்துள்ளார்.

அந்தப் பெண் தற்கொலைதாரி - தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர் என்று கூறப்படுகிறது. அவர்தான் குண்டை வெடிக்க வைத்தவர் எனில், அங்கு நின்று கொண்டிருந்த, படையினருடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருக்க வேண்டும். அதேபோல் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தைக் கைவிட்டு, மகிந்த ராஜபக்ஷவை போருக்குத் திரும்ப அழுத்தம் கொடுப்பதற்காகச் சிங்களத் தீவிரவாதக் குழுவினரைச் சேர்ந்த பெண்ணாக இருக்கவும் மற்றொரு சாத்தியம் உண்டு.

யாழ்ப்பாணத்தில் ஒரு தசாப்த காலத்துக்கு முன்னதாகப் படைத் தளபதியாக சரத் பொன்சேகா பணியாற்றிய போது அவரது மனித உரிமை மீறல் செயற்பாடுகள் குறித்து நான் அதிகம் விளக்க வேண்டியதில்லை. நூற்றுக் கணக்கான தமிழ் மக்கள் கைது செய்யப்பட்டு எந்தவித குற்றச்சாட்டும் இல்லாமல் அல்லது விசாரணையின் பெயரில் காணாமல் போயினர். சித்திரவதை செய்யப்பட்ட நிலையில் அவர்களது சடலங்கள் புதைகுழிகளில் கண்டெடுக்கப்பட்டன.

பலர் உயிரோடு எரித்துக் கொல்லப்பட்டனர். சர்வதேச மன்னிப்புச் சபை போன்ற சர்வதேச அமைப்புக்கள் மற்றும் சர்வதேச பார்வையாளர்களும் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டு, தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டதை உறுதி செய்தனர். சரத் பொன்சேகா தான் இதைச் செய்தார் என்று குற்றம் சாட்டவில்லை. ஆனால், அவரது கட்டுப்பாட்டில் இது நடந்தமையால் அவர் தான் பதிலளிக்க வேண்டியவர். அங்கு நடந்தது என்ன என்பதை அவர் அறியாதிருக்க முடியாது.

கொழும்பில் குண்டுவெடிப்பு நடந்த சில மணி நேரங்களுக்குள்ளாக கொழும்பிலிருந்து 150 கிலோ மீற்றர் தொலைவில் கிழக்கில் உள்ள திருகோணமலையில் படைகள் வான் தாக்குதல் மற்றும் ஆட்லறித் தாக்குதலை நடத்தின. இந்தத் தாக்குதல் நடத்தப்பட்ட வேகமானது - ஒரு திட்டமிட்ட தாக்குதல் தான் என்று சந்தேகத்தை எழுப்பாமல் இல்லை.

திருகோணமலையின் 7 தமிழ்க் கிராமங்கள் குண்டுத் தாக்குதலுக்குள்ளான இஸ்ரேலிய தயாரிப்பான கிபிர் விமானங்கள் பெருந்தொகையான குண்டுகளைப் பொதுமக்கள் குடியிருப்புக்கள் மீது வீசின. அதே நேரத்தில் கடற்படையினரும் பீரங்கித் தாக்குதல்களைக் கடலோரக் கிராமங்கள் மீது நடத்தினர். ஏப்ரல் 25 ஆம் திகதி மாலை 6.30 மணியிலிருந்து, 8 மணி வரை இந்தக் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. 96 கடற்படைப் பீரங்கிக் குண்டுகள் ஓரே பகுதியில் மட்டும் வீசப்பட்டுள்ளன. அடுத்த நாளும் விமானத் தாக்குதல் நீடித்துள்ளது.

கடலிலும், நிலத்திலும், வானிலிருந்துமாகப் படையினர் தாக்குதலை நடத்தியதால், மக்கள் தப்பியோடுவதற்கு எந்தவித வழியும் இல்லை. ஆயிரக்கணக்கான மக்கள், நோயாளிகள், குழந்தைகள் வெளியேறியுள்ளனர். கிபிர் விமானக் குண்டு வீச்சில் 40 கைவிடப்பட்ட சிறார்கள் தங்கியிருந்த - சந்தோசம் சிறார் இல்லமானது - நேரடித் தாக்குதலுக்குள்ளனானது. சுனாமியால் பாதிக்கப்பட்டோரின் முகாம்கள் மீதும் குண்டுகள் வீசப்பட்டன. இந்தத் தாக்குதல்கள் திட்டமிட்டு நடத்தப்பட்டன.

அந்தப் பகுதியில் எந்தவித மருத்துவமனைகளும் இல்லை. இரு மருத்துவ மையங்கள் மட்டுமே தற்காலிகமாக இயங்கின. இதர மருத்துவமனைகளுக்குச் செல்ல முடியாத வகையில் இராணுவத்தினர் வீதித் தடைகளை ஏற்படுத்தியிருந்தனர்.

இந்தத் தாக்குதலை நியாயப்படுத்தும் விதமாக அரச சமாதான செயலகப்பணிப்பாளர் பாலித கொகன்ன, பதில் நடவடிக்கையின் அளவுகோல்களைப் பற்றி கருத்துத் தெரிவித்தார். மேலும் விமானக் குண்டு வீச்சு மற்றும் பீரங்கித் தாக்குதலானது - யுத்த நிறுத்த ஒப்பந்த மீறல் இல்லை என்றும் தெரிவித்தார். சம்பூர் உள்ளிட்ட கிராமங்கள் மீதான அரச படைகளின் தாக்குதல் நியாயமானது என்றும் பாலித கொகன்ன நியாயப்படுத்தினார்.

தமிழர் குடியிருப்புக்கள் மீதான விமானக் குண்டு வீச்சுக்குப் பின்னர் 4 மணி நேரம் கழித்து அரச தொலைக்காட்சியில் உரையாற்றிய அமைதிக்கான மனிதர் என்று தன்னைப்பிரகடனம் செய்துள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, இராணுவத்தினர் பொறுமையுடன் சகித்துக் கொண்டிருப்பதைப் பாராட்டுவதாகக் கூறினார். ஒரு நாட்டின் ஜனாதிபதியாக இருக்கும் மகிந்த ராஜபக்ஷ -விமானக்குண்டுத் தாக்குதல்கள் மற்றும் பீரங்கித் தாக்குதலில் பாதிக்கப்பட்டோருக்கு ஒரு ஆறுதல் வார்த்தை கூட கூறவில்லை. அவரது பாதுகாப்புப் பேச்சாளர் கெகலிய ரம்புக்வெல, பாதுகாப்புத் தரப்பு விடயங்களுக்குக் கால எல்லைகள் எதுவும் இல்லை என்றார்.

மகிந்த ராஜபக்ஷவை நாடாளு மன்றத்தில் ஆதரிக்கும் சிங்கள சந்தர்ப்ப வாத அரசியல் வாதிகளான தங்களது மார்க்சிஸ்டுகள் என்று அழைத்துக் கொள்ளும் ஜே.வி.பி.யினர், தாய்நாட்டைப் பாதுகாக்கப் பயங்கர வாதத்துக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை என்கின்றனர். இதே தேசப்பற்றாளர்கள் தான் 1971 ஆம் ஆண்டுகளிலும் 1988 ஆம் ஆண்டுகளிலும் அரசாங்கத்துக்கு எதிராக போராட்டம் நடத்தினர். தங்களது அரசியலுக்குப் பாரிய அச்சுறுத்தலாக இருந்த முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் கணவரைப் படுகொலை செய்தனர்.



அதேபோல் ஜே.ஆர். ஜயவர்த்தனவின் உறவினரான கிளாடிஸ் ஜயவர்த்தன (இந்தியாவிலிருந்து மருந்துகளை இறக்குமதி செய்யும் நிறுவனத்தின் தலைவராக இருந்ததுதான் அவரது ஒரே குற்றம்) கொழும்புப் பல்கலைக்கழக துணைவேந்தராகப் பொறுப்பேற்க இருந்த ஸ்டான்லி விஜேசுந்தர உள்ளிட்ட முக்கிய கல்வியாளர்கள் பலரையும் படுகொலை செய்தனர். இந்தத் தாக்குதல்களை மேற்கொண்டவர்கள் தான் பயங்கரவாதம் பற்றியும் பேசுகின்றனர்.

எதிர்க் கட்சியாக இருக்கக்கூடிய சிங்களக்கட்சியான ஐக்கியதேசியக் கட்சியிடமிருந்தும் கூட அனுதாப வார்த்தைகள் வரவில்லை. சிறிலங்கா சுதந்திரக்கட்சியைச் சேர்ந்த ஜனாதிபதியான மகிந்த ராஜபக்ஷவை சந்தித்த பின்னர், ஊடகவியலாளர்களிடம் பேசிய ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் திஸ்ஸ அத்தநாயக்க அமைதி முயற்சிகள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட வேண்டுமானால், விடுதலைப்புலிகள் தங்களது வன்முறைகளைக் கைவிட வேண்டும் என்றார்.

கொழும்புத் தாக்குதலை - அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், ஜப்பான் மற்றும் இந்தியா ஆகியன கண்டனம் செய்தன. இருதரப்பும் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தைக் கடைப்பிடித்துப் பேச்சுக்களுக்குத் திரும்ப வேண்டும் என்று வலியுறுத்தின. இரண்டாவது நாள் குண்டு வீச்சு தொடர்ந்த போதும் அவசரமான ஆலோசனை நடத்திய இந்தியா, பாக்கு நீரிணைப்பகுதியில் மேலதிக கடற்படையினரை அனுப்பியது - நிராயுதபாணிகளான தமிழ் மக்கள் மீதான பீரங்கித் தாக்குதல்களை நடத்திய கடற்படையினருக்கு உதவ.

அமெரிக்காவின் இராஜாங்க அமைச்சின் தெற்காசிய விவகாரங்களுக்கான உதவிச் செயலாளர் ரிச்சட் பௌச்சர், விடுதலைப்புலிகள் - மீண்டும் யுத்தத்தைத் தொடங்க இருப்பது விரும்பத்தக்கது அல்ல. உலக நாடுகளுடன் நாம் தொடர்பு கொண்டு இத்தகைய நடவடிக்கைகளை விடுதலைப்புலிகள் கைவிட அழுத்தம் கொடுக்க முயற்சிக்கிறோம் என்று கூறினார். இலங்கை அரசாங்கத்துக்கு அமெரிக்கா பெருந்தொகையான ஆயுதங்களை வழங்கியது. அவைதான் திருகோணமலை தாக்குதலுக்கும் பயன்படுத்தப்பட்டுள்ளன. கிபிர் விமானங்களை வழங்கிய இஸ்ரேலிடமிருந்து எந்தவித பதிலும் வரவில்லை.

சர்வதேச மன்னிப்புச் சபை அனுதாபத்தைத் தூண்டும் வேண்டுகோள் விடுத்திருந்தது. பொதுமக்களைப் பாதிக்கும் நடவடிக்கைகளை இருதரப்பும் குறைத்துக்கொண்டு சர்வதேச மனித உரிமைச் சட்டங்களை கடைபிடிக்க வலியுறுத்தியது. இலங்கை அரசாங்கம் பகிரங்கமாக மனித உரிமைகளை மனித உரிமைச் சட்டங்களை மீறிய நிலையில் கண்டனம் தெரிவிக்கப்படவில்லை.

இந்தக் கொடூரத்துக்கு, அரசாங்கம் தான் முதலில் பதில் சொல்ல வேண்டிய தில்லை. சொந்த நாட்டின் மக்கள் மீதான தாக் குதலுக்கு ஒரு பொறுப்பற்ற அரசாங்கம் பயன்படுத்தியிருக்கும் ஆயுதங்களை யார் வழங்கினார்களோ அவர்கள் தான் பதில் சொல்ல வேண்டும். இலங்கை அரசாங்கம் சொந்தமாகக் கிபிர் விமானங்கள் தயாரிப்பதில்லை. பல்குழல் எறிகணைகளையோ ரொக்கெட்டுகளையோ தயாரிக்கவில்லை.

அந்த மக்கள் தமிழர்களாகப் பிறந்துதான் அவர்கள் செய்த ஒரே குற்றம். அந்தக் குற்றத்துக்காக அவர்கள் அனுபவித்து வரும் துயரம் குறித்து இந்த உலகில் எவரும் கவனிப்பாரில்லை.

1952 ஆம் ஆண்டில் விலங்கியல் துறை மாணவனாக இருந்த போது அந்தக் கிராம மக்களை நான் சந்தித்துள்ளேன். மரத்தடி நிழலில் படுத்திருந்த எம்மை சில இளைஞர்கள் நள்ளிரவில் எழுப்பினர். இங்கு என்ன செய்கிறீர்கள் என்று கேட்டனர். இங்கு சில நாட்கள் தங்க முடிவு செய்திருப்பதாகக் கூறினோம். அப்போது அவர்கள் தங்களது குடியிருப்புகளுக்குள் அழைத்துச் சென்று உணவு அளித்து எமக்கு தங்கவும் இடமளித்தனர்.

அந்த இளைஞர்கள் இன்று முதியவர்களாக, விமானக்குண்டு வீச்சில் தப்பியவர்களாகச் சிலர் இருக்கக் கூடும் என்று நம்புகிறேன்.

ஒரு படுப்யாங்கரமான, காட்டுமிராண்டித்தனமான, பொறுப்பற்ற ஒரு நிர்வாகம் தன்னை "அரசாங்கம்" என்று அழைத்துக் கொள்கிறது என்று அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கடிதத்துடன் "இஸ்ரேல், அமெரிக்கா, இங்கிலாந்து, பாகிஸ்தான், இந்தியா மற்றும் சீனா உள்ளிட்ட நாடுகள் வழங்கிய ஆயுதங்களைப் பயன்படுத்தி இலங்கை அரசாங்கம் தனது சொந்த மக்கள் மீது நடத்திய தாக்குதல் படங்கள்" என்ற தலைப்பில் திருமலை தாக்குதல் படங்களையும் பிறயன் செனிவிரட்ன இணைத்துள்ளார். *

நமது ஈழநாடு

சிந்தனைக்கு!
நோவற்க நொந்தது அறியார்க்கு மேவற்க
மென்மை பகைவர் அகத்து.

- திருக்குறள்-

## நமது நோக்கு

# முற்றுப்புள்ளி கடினமே!

எல்லையோர சிங்களக் கிராமங்களிலுள்ளோரை ஆயுதபாணிகளாக்கும் திட்டத்தை அரசாங்கம் நடைமுறைப்படுத்தத் தொடங்கியிருக்கிறது. ஏற்கனவே ஊர்காவற்படை என்ற பெயரில் பெரியதொரு படைப்பிரிவை இலங்கை அரசு கொண்டிருக்கிறது.

இப்போது மேலும் 10 ஆயிரம் பேரைத் திரட்டி - அவர்களுக்கு ஆயுதப் பயிற்சி கொடுத்து ஊர்காவற் படையினராக நியமிக்க அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது.

வெலி ஓயா, வவுனியா, பொலநறுவ, திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களில் எல்லைப்புறச் சிங்களக் கிராமங்களின் பாதுகாப்புக்கெனவே இந்த ஊர்காவற்படையைத் திரட்டும் முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

இராணுவத்துக்கான ஆட்சேர்ப்பு முயற்சி தோல்வி கண்ட நிலையில் - எல்லைப்புறக் கிராமங்களின் பாதுகாப்புக்கென்று கூறி சிங்களவர்களை ஆயுதபாணிகளாக்கிவருகிறது அரசு.

இந்தச் சிங்கள ஊர்காவற்படையினர் - தமிழர்களின் பாரம்பரிய நிலப்பகுதியை ஆக்கிரமித்து, குடியேறி வரும் சிங்களக் குடியேற்றங்களைப் பாதுகாக்கும் பணியிலேயே ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

இதன் மூலம் சிங்களக் குடியேற்றங்களில் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படுவதுடன் - இது மேலும் விரிவாக்கப்பட்டு தமிழர்களின் பாரம்பரிய குடியிருப்புக்களை ஆக்கிரமிப்பதற்கு இலங்கை அரசு திட்டமிடுகிறது.

கடந்தகாலங்களில் சிங்கள ஊர்காவற்படையினர் மூலம் நடத்தப்பட்ட இனப் படுகொலைகள் ஏராளம். பல்லாயிரம் சிங்கள மக்களை ஆயுதம் ஏந்த வைத்து அவர்கள் மூலம் தமிழின அழிப்பை - அவர்களின் இருப்பின் அடையாளத்தை அழிக்க அரசு முற்பட்டது.

இப்போது மீண்டும் - ஜே.ஆர், பிரேமதாஸ போன்ற ஆட்சியாளர்களின் வரிசையில் மகிந்த ராஜபக்ஷவின் அரசும் சிங்கள மக்களை ஆயுதபாணிகளாக்கி அப்பாவித் தமிழ் மக்களுக்கு எதிராகத் திருப்பிவிடும் முயற்சியில் இறங்கியுள்ளது.

ஏற்கனவே திருகோணமலையில் சிங்கள ஊர்காவற் படையினர் மற்றும் சிங்களக் காடையர்கள் மூலம் தமிழர்களுக்கெதிராக இனப்படுகொலைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. மூதூர் பிரதேசத்திலும், சேருவில பிரதேசத்திலும் சிங்கள ஊர்காவற் படையினரின் இனவெறித் தாக்குதலுக்கு பல தமிழர்கள் இரையாக்கப்பட்டுள்ளனர்.

மேலும் திருகோணமலை நகரப்பகுதியில் பெருமளவு தமிழ் மக்கள் சிங்களக் காடையர்களின் இனவெறித் தாக்குதல்களில் கொல்லப்பட்டும், கோடிக்கணக்கான பெறுமதியுள்ள சொத்துக்கள் அழிக்கப்பட்டும், சூறையாடப்பட்டும் உள்ளன.

இப்போதைய அரசு பதவிக்கு வந்தபின்னர் தமிழ் மக்கள் மீதான இனவெறித் தாக்குதல்களை பல்வேறு வடிவங்களிலும் முன்னெடுக்கப்பட்டு வருவது தீவிரம் பெற்றிருக்கிறது. இதன் ஒரு கட்டமாகவே எல்லையோரத்தில் சிங்களவர்களை ஆயுதம் ஏந்தவைக்கும் முயற்சி ஆகும்.

ஏற்கனவே பல்லாயிரம் சிங்களவர்களை குடியேற்றவாசிகளாக்கி, ஆயுத பாணிகளாக்கிய நிலையிலும் மேலும் பத்தாயிரம் பேருக்கு ஆயுதங்கள் வழங்கி படையில் சேர்ப்பதென்பது மிகவும் மோசமான நிலைக்கே வழிவகுக்கும்.

இந்த அரசு சமாதான காலத்தில், தமிழர் தாயகத்தில் தமிழ் மக்களின் நிம்மதியையும், அமைதியையும் சீர்குலைத்திருக்கிறது.

அதுபோலவே சிங்கள எல்லையோரக் கிராமவாசிகளை ஆயுதபாணிகளாக்கி மேலும் தமிழர் தாயகப் பிரதேசங்களை விழுங்கி ஏப்பமிடச் செய்யும் முயற்சியில் இறங்கியிருக்கிறது.

ஒட்டுமொத்தமாக தமிழ் மக்களின் இருப்புக்கே ஆப்புவைக்கும் வகையில் செயற்படும் அரசு, ஒருபோதும் தமிழ் மக்களுக்கு நீதியான, நியாயமான அரசியல் தீர்வை வழங்கப்போவதில்லை என்பது உறுதியாகிவிட்டது.

ஏதோ சர்வதேச நிர்ப்பந்தத்துக்காக பேச்சுக்கள் என்று போக்குக் காட்டிக்கொண்டு, தமிழ் மக்கள் மீதான இன அழிப்பில்தான் தீவிரம் காட்டிவருகிறது.

சர்வதேச சமூகம் இந்தச் செயல்களையெல்லாம் கண்டும் காணாமல் இருக்கும் வரை அரசின் இந்தப் போக்குக்கு முற்றுப்புள்ளி வைப்பது கடினமே.

267, Navalar Road,
Jaffna.
T.P.021-2225107
Fax - 021 - 2223922
Web - www.eezhanaadu.com
email-eezhanaadu @ yahoo.com

## நாடும் நடப்பும்




# புலிகள் மீது தடை விதிக்க கோரும் இலங்கை அரசின் முயற்சி தோல்வி

கிளிநொச்சி

தமிழீழ விடுதலைப் புலிகள் மீது ஐரோப்பிய ஒன்றியம் தடை விதிக்க வேண்டும் என்ற இலங்கை அரசின் முயற்சி தோல்வியடைந்துள்ளதாக தகவல்கள் தெரிவித்தன.

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் விடுதலைப்புலிகளை தடை செய்வதற்கு கொண்டுவரப்பட்ட யோசனைக்கு மூன்று நாடுகள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.

எனவே புலிகள் மீது தடை விதிக்கும் முடிவை ஐரோப்பி ஒன்றியம் கைவிடக்கூடும் என்று ஐரோப்பிய ஒன்றியத் தூதரக வட்டாரத் தகவல்கள் தெரிவித்தன.

ஐரோப்பிய ஒன்றியத்தின் அங்கத்துவ நாடுகளான சுவீடன் டென் மார்க் மற்றும் பின்லாந்து ஆகிய நாடுகளின் விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடைசெய்வதை எதிர்த்து ஏற்கனவே உத்தியோகப்பற்றற்ற வகையில் விடயங்களை முன் வைத்துள்ளன.

ஐரோப்பிய ஒன்றிய சட்ட திட்டங்களுக்கமைய ஏதே னும் ஒரு யோசனைக்கு எதிராக இத்தகைய எதிர்ப்பு ஏற் படுமானால் அந்த யோசனை அனுமதிக்காக முன்வைக் கப்பட்டுவதில்லை. எனினும் ஐரோப்பிய ஒன்றியத்தைச் சேர்ந்த பிரித்தானியா ஏற்கனவே விடுதலைப்புலிகளைத் தடைசெய்துள்ளது.

தற்போது இந்த மூன்று ஸ்கண்டிநேவிய நாடுகள் கடும் எதிர்ப்பு தெரிவிப்பதால் விடுதலைப்புலிகளுக்குத் தடை விதிக்கும் யோசனை கிடைப்பில் போடப்படலாம் தூதரக வட்டாரங்கள் தெரிவித்தன.

## கண்காணிப்புக் குழுப்பேச்சாளர் அரசுக்கு எதிராகப் பிரசாரமாம்

கொழும்பு

இலங்கையின் அராஜக நிலை நிலவுவதாகத் தெரிவித்து கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் இலங்கை அரசுக்கு எதிராகப் பிரசாரம் மேற்கொண்டுமை தெரியவந்துள்ளதென இராணுவ அதிகாரியொருவர் தெரிவித்தாகச் சிங்களப் பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

இலங்கையில் வன்முறைகளைக் கட்டுப்படுத்த முடியாதளவுக்கு நிலைமை உள்ளதாகக் கண்காணிப்புக் குழுப் பேச்சாளர் ஹெலன் ஒலப்ஸ்டோட்ரயர் வெளிநாட்டு ஊடகங்களுக்குத் தெரிவித்தார். போர்நிறுத்த ஒப்பந்தம் குறித்த விடயங்களை மட்டும் தெரிவிப்பதற்கே அவருக்கு உரிமையுண்டு. ஆனால், அவர் வெளிநாட்டு ஊடகங்களுக்கு இலங்கையின் நிலைமைகளைத் தெரிவித்துள்ளார் எனவும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (தே)

## தரம் 1 மாணவர்களுக்கு அனுமதிக்கு பொதுசுற்றறிக்கை தயாரிப்பு

### கல்வியமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு

அடுத்த வருடம் தரம் 1 இல் பாடசாலையில் மாணவர் களைச் சேர்ப்பதற்காக தேசிய பாடசாலைகள் மற்றும் மாகாண பாடசாலைகள் என்பவற்றுக்கு பொதுச் சுற்றறிக்கை ஒன்றைச் செயற்படுத்த விருப்பதாக கல்வி அமைச்சர் சுசில் பிறேமஜயந்த தெரிவித்துள்ளார்.

அடுத்த வருடம் தரம் 1 இல் மாணவர்களை சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்பப் படிவங்கள் யூன் 1ஆம் திகதி தொடக்கம் 30 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படுமெனவும், மாணவர்களை தேர்ந்தெடுக்கும்முறை பாட சாலை அதிபர்களின் கீழ் ஒப்படைக்கப்படுமெனவும் கல்வி அமைச்சர் தெரிவித்தார்.

புதிய சுற்றறிக்கையின்படி மாணவரை தேர்தெடுக்கும் விதம் பற்றி தற்போது வரைபு பிரதி ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் அது இந்த மாத நடுப்பகுதியில் அமைச் சரவையின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (தே)

## கிருலப்பனை தேடுதலில் ஏழு தமிழர்கள் கைது

கொழும்பு

கிருலப்பனையில் நடத்திய தேடுதல் நடவடிக்கையின் போது விடுதலைப்புலிகள் என்ற சந்தேகத்தின் பேரில் 07 தமிழ் இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டனர். தற்காலிக தங்குமிடங்களில் தங்கியிருந்த போதே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்கள் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மாவட்டங்களை சேர்ந்தவர்களெனவும் இவர்கள் புலிகளுக்கு ஆதரவானவர்கள் என பொலிஸாருக்கு தகவல் கிடைத்தாகவும், கிருலப்பனையில் இது போன்ற சோதனை நடவடிக்கைகள் தொடரும் எனவும் கிருலப்பனை குற்றத்தடுப்பு பொலிஸ் இன்ஸ்பெக்டர் ரணசிங்க தெரிவித்தார். (தே)

# ஜெனிவாப் பேச்சுக்கள் இந்த மாத இறுதியில்?

கொழும்பு

விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையிலான அடுத்த கட்டப் பேச்சுக்கள் ஜெனிவாவில் இந்த மாத இறுதியில் அல்லது அடுத்த மாதத் தொடக்கத்திலேயே இடம்பெறலாம் என ஐ.ஏ.என்.எஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஐ.ஏ.என்.எஸ் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

விடுதலைப்புலிகளின் கிழக்குப் பிராந்தியத் தளபதிகளின் வன்னிக்கான பயணத்துக்கு அரசு ஹெலிகளை வழங்க முடியாதென அறிவித்ததால் இரண்டாம் கட்ட ஜெனிவாப் பேச்சுகள் ஒத்திவைக்கப்பட்டன.

இரண்டாம் கட்டப் பேச்சுக்கள் ஒத்திவைக்கப்பட்ட நிலையில் வடக்கு - கிழக்கில் வன்முறைகள் தீவிரமடைந்து வருகின்றன.

இந்த நிலையில் இருதரப்பினரையும் ஜெனிவா பேச்சு மேசைக்குக் கொண்டு வருவதற்கான முயற்சி தீவிரமாக எடுக்கப்பட்டு வருகிறது.

புலிகளின் தளபதிகளின் பயணத்துக்கு கடல் - விமானங்களை வழங்க இலங்கை அரசு முன்வந்துள்ளதால் இதனைப் புலிகள் ஏற்றுக்கொண்டால் ஜெனிவாவில் பேச்சுகள் இந்தமாத இறுதியில் அல்லது அடுத்தமாதத் தொடக்கத்தில் நடை பெறும்.

எனினும் இதுகுறித்த எந்த இறுதி முடிவும் எடுக்கப்படவில்லை என்றும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை - எதிர்வரும் 10 ஆம் திகதி ஜெனிவாவில் பேச்சு நடைபெறுமென அரசு கூறியிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# சுருக்கிடப்பட்ட நிலையில் தென்னையில் தொங்கிய சடலம்

## அடித்துக் கொலை என சந்தேகம்

கோண்டாவில் —

உரும்பிராய் மேற்குப் பகுதியில் தென்னை மரத்தில் சுருக்கிட்ட நிலையில் ஆண் ஒருவரின் சடலம் நேற்று அதிகாலை அப்பகுதி இளைஞர்களால் மீட்கப்பட்டது.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது -

குறித்த பகுதியிலுள்ள 2 பிள்ளைகளின் தந்தையான குட்டியன்-இராஜேஸ்வரன்(வயது 37) என்பவரது வீட்டு முற்றத்தில் தென்னை மரத்தில் சுருக்கிட்டு தொங்கிய நிலையில் அவரது சடலமே இவ்வாறு மீட்கப்பட்டது.

மேற்படி நபர் மது அருந்துபவர் எனவும் இவர் ஒரு கால் இழந்த நிலையில் அதே இடத்தில் வசித்து வந்துள்ளார். ஆனால் இந்த நபர் சுருக்கிட்டு இறந்ததற்கான தடயங்கள் ஏதும் காணப்படாதவிடத்து இவர் அடித்து கொலை செய்யப்பபட்ட பின்னர் சுருக்கில் மாட்டப்பட்டிருக்கலாம் என அந்தப்பகுதி மக்கள் தெரிவித்தனர். இவரது உடலில் மார்பு, கால் பகுதிகளில் அடிகாயங்கள் காணப்பட்டன.

இறந்தவரின் சடலம் நேற்றுக் காலை 10 மணியளவில் அந்தப் பகுதி கிராம சேவையாளர் ஊடாக யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது. (82)

## மந்துவிலில் காணாமற்...

தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:-

மந்துவில் கிழக்கில் உள்ள கீழக்கை அம்மன் ஆலயத்தின் கும்பாபிஷேக நிகழ்வின் ஐந்தாம் நாள் நேற்றாகும்.

இதனை முன்னிட்டு ஆலயத்தில் திருப் பணி வேலைகளைச் செய்வதற்காக ஆலயத்தின் தர்மகர்த்தாவும், கரம்பைக் குறிச்சி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை ஆசிரியருமான இராஜநாயகம் சிவானந்தமூர்த்தி தலைமையில் எட்டு இளைஞர்கள் மற்றும் மாணவர்கள் அங்கு தங்கியிருந்தனர்.

நேற்றுக்காலை ஆலயத்துக்குச் சென்றவர்கள் காணாமற்போனவர்களைத் தேடியபோது தேர் மற்றும் ஆலயச் சுவர் பகுதியில் இரத்தக்கறை மற்றும் மூன்று அடையாள அட்டைகள், சிலரது ஆடைகளின் கிழிந்த பாகங்கள் மற்றும் சருகுகளாலும், மண்ணாலும் மூடப்பட்ட இரத்தக் கறை ஆகியவற்றைக் கண்டனர்.

அத்துடன் ஆறு வெற்றுத் துப்பாக்கித் தோட்டாக்களும் அங்கு கண்டெடுக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

இதையடுத்து மேற்படி இளைஞர்கள் படையினரால் பிடித்துச் செல்லப்பட்டிருக்கலாம் அல்லது படுகொலை செய்யப்பட்டு எங்காவது சடலங்கள் புதைக்கப்பட்டிருக்கலாம் என்ற அச்சம் அந்தப்பகுதி மக்களிடையே எழுந்துள்ளது.

இது தொடர்பாக கொடிகாமம் பொலிஸ், மனிதஉரிமைகள் ஆணைக்குழு ஆகியவற்றிடமும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அந்தப்பகுதி மக்களால் முறையிடப்பட்டிருக்கிறது.

மேலும் வரணி இராணுவ முகாமில் இவர்கள் தடுத்துவைக்கப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தில் அங்கு சென்று விசாரித்தபோது தாம் எவரையும் பிடிக்கவில்லை எனப் படைத்தரப்பினர் மறுத்துள்ளனர்.

இந்த நிலையில் இராஜநாயகம் சிவானந்தமூர்த்தி (வயது 35), இராமச்சந்திரன் இராஜ்குமார் (வயது 22), வைகுந்தவாசன் வைகுந்தன்(வயது 17), மார்க்கண்டு புஷ்பகாந்தன் (வயது 18), கந்தசாமி பரிமேலழகன் (வயது 21), பொன்னம்பலம் பார்த்தீபன் (வயது 17), செல்வரத்தினம் சிவகாந்தன் (வயது 21), குணரத்தினம் தயாரூபன் (வயது 21) ஆகியோரே காணாமற்போயுள்ளனர்.

இதேவேளை, காணாமற்போன இந்த எட்டு இளைஞர்களும் படையினரால் பிடித்துச்செல்லப்பட்டிருக்கலாம், அல்லது படுகொலை செய்யப்பட்டிருக்கலாம் என்று அந்தப்பகுதி மக்கள் அச்சம் தெரிவித்தனர்.

காணாமற்போன இளைஞர்களுடன் வேறு சிலரும் நேற்றுமுன்தினம் இந்த ஆலயத்தின் தங்கியிருந்த போது இராணுவத்தினர் வந்து ஏன் தங்கியிருக்கிறீர்கள் என்று விசாரித்து விட்டுச் சென்றதாகவும், இதன்பின்னர் ஏனைய இளைஞர்கள் அங்கிருந்து தமது வீடுகளுக்குச் சென்றுவிட்டதாகவும் கூறப்படுகிறது.

நேற்று அதிகாலை 1.10 மணியளவில் ஆலயப் பக்கமாக எட்டுக்கும் மேற்பட்ட துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்டதாகவும் - அதற்குச் சற்று முன்னர் ஜீப் ஒன்று நடமாடிய சத்தத்தைக் கேட்கமுடிந்ததாகவும் அந்தப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இதற்குப் பின்னர் அதிகாலை 4 மணியளவில் வழமைக்கு மாறான முறையில் ஆலயப் பகுதியில் பவள் கவன வாகனம் மற்றும் ஜீப் ஆகியவை நடமாடியதை உணரக்கூடியதாக இருந்ததாக அயலிலுள்ள மக்கள் தெரிவித்தனர். இவர்கள் சுமார் 30 நிமிடங்கள்வரை அந்தப்பகுதியில் தங்கிநின்றதாகவும் கூறப்படுகிறது.

இதன்போது இளைஞர்களைப் படுகொலை செய்துவிட்டோ அல்லது கைதுசெய்துகொண்டோ வாகனங்களில் கொண்டுசென்றிருக்கக்கூடும் என்று அந்தப்பகுதி பொதுமக்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

## திருநெல்வேலி...

சாந்தரூபன் கிருஷாந் (வயது 28) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

நேற்று மாலை 6 மணியளவில் திருநெல்வேலியிலுள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக ஓட்டோ ஒன்றில் நண்பருடன் சென்ற இவர் - நண்பரை ஓட்டோவுக்கு அருகில் நிறுத்திவிட்டு வீதியால் நடந்துசென்று கொண்டிருந்தவேளை மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்கள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் பிரஸ்தாப இளைஞன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

யாழ். நீதிவான் சரோஜினி இளங்கோவன் விசாரணையை மேற்கொண்டதுடன் கோப்பாய் பொலிஸாரின் உதவியுடன் சடலத்தை யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்க உத்தரவிட்டார்.

## மட்டக்களப்...

வெடித்ததில் ஒரு சிவிலியன் உட்பட எட்டு பொலிஸார் படுகாயமடைந்தனர்.

சம்பவத்தில் காயமுற்றவர்கள் மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

அதேவேளை, இந்தச் சம்பவத்தில் 12 பொலிஸார் காயமுற்றதாக மற்றொரு தகவல் தெரிவித்தது.

## வவுனியாவில்...

இந்தத்தாக்குதல் சம்பவத்தில் இராணுவச் சிப்பாய் ஒருவர் படுகாயமடைந்தார். இதையடுத்து படையினர் பதில் தாக்குதல் நடத்தியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## புலிகள்...

சுமார் 30 நிமிடங்கள் நீடித்தது.

இராணுவத்தினரது தாக்குதலையடுத்து வவுணதீவிலிருந்து பொதுமக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு இடம் பெயர்ந்து சென்றனர்.

இந்தத்தாக்குதல் குறித்து கருத்துத் தெரிவித்த இராணுவப்பேச்சாளர் விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதலுக்கு பதில் தாக்குதல் நடத்தியதாகத் தெரிவித்தார்.

# படுகொலைகளை நிறுத்துமாறு அரசுக்கு அழுத்தம் கொடுங்கள்!

## அகாஷியிடம் கூட்டமைப்பு வேண்டுகோள்



கொழும்பு —

அப்பாவி தமிழ்மக்கள் திட்டமிட்டுப்படுகொலை செய்யப்பட்டுவருவதை உடன் நிறுத்த அரசாங்கத்துக்கு, ஜப்பானிய அரசு அழுத்தம் கொடுக்க வேண் டும் என தமிழ்த்தேசிய கூட்டமைப்பு வலியுறுத்தியுள்ளது.

நேற்றுமுன்தினம் இலங்கைக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்ட யப்பானிய விசேட தூதுவர் யசூசி அகாஷி நேற்று கொழும்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்து பேசியபோதே இவ்வாறு வலியுறுத்தினர்.

தமிழ் மக்களுக்கு எதிராக திட்டமிட்டு நடத்தப்படும் படுகொலைகளை அரசு உடன் நிறுத்த வேண்டும்.

அரசு தமிழ் மக்கள் மீது நடத்தப்பட்டுவரும் படுகொலைகளை நிறுத்துவதில் அசமந்த போக்கைக் கடைப்பிடித்து வருகின்ற நிலையில் அதனை உடன் நிறுத் தாவிடின் சமாதான பேச்சுக்கள் ஒரு போதும் சாத்தியமாகாது.

எனவே வடக்கு - கிழக்கில் திட்டமிட்டு நடத்தப்பட்டு வரும் படுகொலைகளை உடன் நிறுத்த அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என ஜப்பானிய அரசு வலியுறுத்தவேண்டும்.

இவ்வாறான படுகொலைகள் அதிகரித்துச் செல்வதை ஒரு போதும் அனுமதிக்க முடியாதென வலியுறுத்தியதாக தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் என்.ரவிராஜ் தெரிவித்தார்.

இதே வேளை அரசு -விடுதலைப் புலிகளுக்கு இடையில் உடன் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும என யசூசி அகாஷி தமிழ்த் தேசிய கூட்டமைப்பினரிடம் தெரிவித்தார்.

# மகிந்தவுடன் இன்று அகாஷி சந்திப்பு

கொழும்பு —

ஜப்பானிய விசேட தூதுவர் யசூஷி அகாஷி இன்று கொழும்பில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் பேச்சுக்களை நடத்தவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சனிக்கிழமை கொழும்புக்கு வந்த ஜப்பானிய விசேட தூதுவர் யசூஷி அ:காஷி, சமாதான முயற்சிகளை முன்னெடுப்பது குறித்து - பல்வேறு தரப்பினருடனும் பேச்சுக்களை நடத்தி வருகிறார்.

இன்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைச் சந்திக்கும் அகாஷி, நாளை கிளிநொச்சிக்கு விஜயம் செய்து விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.

இந்தச் சந்திப்பு நாளை காலை 10.30 மணிக்கு நடைபெறுமென்று விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகப் பணிப் பாளர் புலித்தேவன் தெரிவித்தார்.

# மன்னாரில் கிளைமோர்

மன்னார் —

மன்னாரில் நேற்று மாலை கிளைமோர் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் - எனினும் இந்தச் சம்பவத்தில் படையினருக்கு எவ்வித சேதமும் ஏற்படவில்லை என்றும் இராணுவத்தரப்பு அறிவித்துள்ளது.

மன்னார் - சூரியகட்டைக்காட்டில் நேற்று மாலை 6.30 மணியளவில் இந்த கிளைமோர் குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டது.

விடுமுறையில் சென்றுவிட்டுமுகாம் திரும்பிய 6 படையினர் இந்தத் தாக்குதலில் மயிரிழையில் உயிர் தப்பியதாகக் கூறப்படுகிறது. உயிலங்குளத்துக்கும் முருங்கனுக்கும் இடையில் நடந்த இந்தத் தாக்குதலில் படையினருக்குஎவ்விதகாயமும்ஏற்படவில்லை.

# உரிமை கோரியது எல்லாளன் படை!

யாழ்ப்பாணம் —

திருநெல்வேலியில் நேற்று மாலை சுட்டுக்கொல்லப்பட்ட நீர்வேலி கரந்தனைச் சேர்ந்த சாந்தன் என்பவரின் கொலையை யாழ். மாவட்ட எல்லாளன் படை உரிமை கோரியது.

இது தொடர்பாக எல்லாளன் படை வெளியிட்ட ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

நீர்வேலி கரந்தனைச் சேர்ந்த சாந்தன் என்பவர் எதிரிகளுடனும், ஈ.பி.டி.பி.தேச விரோதிகளுடனும், தமிழினத் துரோகிகளுடனும் இணைந்து செயற்பட்டதுடன், சமூக சீர்கேட்டிலும் ஈடுபட்டு வந்துள்ளார்.

இவருக்கான எமது எச்சரிக்கை விடுக்கப்பட்டு வந்தபோதும் அதனை மீறிச் செயற்பட்டமையால் திருநெல்வேலி பகுதியில் வைத்து அவருக்கான எமது தீர்ப்பை வழங்கியுள்ளோம் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## யாழ்...

மையகம் தமக்குத் தெரியப்படுத்தியதாக யாழ். மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் இன்று நண்பகல் எமக்குத் தெரிவித்தார்.

## ஏ 9...

முதல் ஊடரங்கு அமுல்படுத்தப்பட்ட நிலையில் இன்று காலை முகமாலை சோதனைச் சாவடியூடான வன்னிப் பகுதிக்கான போக்குவரத்தைப் படையினர் தடைசெய்திருந்தனர்.

அதேவேளை இன்று காலை வவுனியா - ஓமந்தை சோதனைச் சாவடியூடாகவும், மன்னார் - உயிலங்குளம் மற்றும் மடு வீதியூடாகவும் வன்னிப் பகுதிக்குப் பொதுமக்கள் செல்வதைப் படையினர் தடைசெய்திருப்பதாக இன்று காலை அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

## மந்துவில்...

இந்தச் சம்பவம் இராணுவ கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் நடந்ததா? இல்லையா? என்பது பற்றி தற்போது எதனையும் உறுதியாகக் கூறமுடியாது என்றும் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க தெரிவித்தார்.

# மரண அறிவித்தல்கள்

## சின்னையா கணேசமூர்த்தி

புங்குடுதீவு 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், சரவணை கிழக்கு மயிலப்புலத்தை வதிவிடமாகவும், தற்போது இல.264, சில்வா வீதி வட்டக்கச்சியில் வசித்தவருமாகிய **சின்னையா கணேசமூர்த்தி** 07.05.2006 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா - பறுவதபத்தினி ஆகியோரின் அன்பு மகனும், நாகநாதி, இராசம்மா ஆகியோரின் அன்பு மருமகனும், புவனேஸ்வரியின் (இந்திரா) அன்புக் கணவரும், காலஞ்சென்ற தர்மலீலா, கமலலீலா (ஆசிரியை), யசோதா (ஜேர்மன்), கஜேந்திரன் (வரதாபான்சி, கிளிநொச்சி), காலஞ்சென்ற நந்தினி, தர்சினி (யாழ்), ஐங்கரன் (தமிழ்க்குமரன் அழகு மாடம், கிளிநொச்சி), சிறிகரன் (வவுனியா வளாகம், யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

மற்றும் முருகானந்தம் (அனுரா ஹவுஸ், கொழும்பு), சிவகுமார் (ஜேர்மன்), திசோகுமார் (வளர்மதி மோட்டார்ஸ், யாழ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், வர்சினி (ஜேர்மன்), வக்சனா (யாழ்) ஆகியோரின் அன்புப் பேரனும் - காலஞ் சென்றவர்களான சிவக்கொழுந்து, ஆச்சிமுத்து, அன்னம்மா, ஏகாம்பரம் மற்றும் திருமேனி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான மயில்வாகனம், கார்த்திகேசு, தியாகராசா மற்றும் நாகராசா, பத்மநாதன், அன்னபூரணி, பரமானந்தசிவம், காலஞ்சென்ற கருணானந்தன் மற்றும் வரதராஜன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 08.05.2006 திங்கட்கிழமை பகல் 12 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக மம்மில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

264, சில்வா வீதி,
வட்டக்கச்சி.
(C/wo 2267)
தகவல் :
குடும்பத்தினர்

## வல்லிபுரம் குமாரலிங்கம்

இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட **வல்லிபுரம் குமாரலிங்கம்** அவர்கள் 07-05-2006 இல் காலமானார்.

இவர் கணேஸ்வரியின் அன்புக் கணவரும், அமரர் கிரிஜா, ஸ்ரீதர் (Denshi Photo, உசன்), அனுஷா, வனஜா (ஜேர்மனி), கீதா, குருபரன் (பிரான்ஸ்), பதீதரன் (mOuse) ஆகியோரின் தந்தையும், மஞ்சரிதேவி (கொழும்பு), சண்முகவடிவேல் (சரவணன் க்ளஞ்சியம்), ஸ்ரீதரன் (ஜேர்மனி), இரகுநாதன் (பெற்றா எசன்ஸ்), துஷானந்தி ஆகியோரின் மாமனாரும், அமரர் சுப்பையா, அமரர் இராசதுரை, திருநாவுக்கரசு, பொன்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியை இன்று 08-05-2006 திங்கட்கிழமை பி.ப. 1 மணிக்கு நடைபெற்று, காரைக்கால் இந்து மயானத்தில் தகனக்கிரியை நடைபெறும்.

*K.K.S. Road,*
*Inuvil.*
(C/5320)
தகவல்
குடும்பத்தினர்.

## திருமதி நாகராசா சிவபாக்கியம்
(சங்கானை)

மல்லாகம் சந்தி, சங்கானையை வசிப்பிடமாகக் கொண்ட **திருமதி நாகராசா சிவபாக்கியம்** (உரிமையாளர் - விநாயகர் அரிவு ஆலை, சங்கானை) அவர்கள் 06.05.2006 சனிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

மல்லாகம் சந்தி,
சங்கானை.
(C/5319)
தகவல் :
குடும்பத்தனர்

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 08.05.2006 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.